21 JAN 2001
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாண
தலைமை நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கம்: எட்டு
விலை ரூபா 5.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 தை 08 ஞாயிற்றுக்கிழமை (21-01-2001) தொலைபேசி: 3378 ஒலி: 33

லாலா சோப்
அதிர்ஷ்டலாபச்சீட்டு
பரிசுகள்
தங்க நாணயங்களும்
பெறுமதியான சாறிகளும்
ரிக்கற் விபரம் 10/-
லாலா சோப்
அச்சுவேலி
(கி-1045)

## ★ யுத்தநிறுத்தம் சமாதானப் பேச்சை வலியுறுத்தி

# மட்டக்களப்பில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிப்பு

### யாழ். பல்கலையில் கறுப்பு கொடிகள்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில் நேற்று இடம் பெற்ற ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து யாழ்.பல்கலைகழகத்தில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன மாணவர்கள் கறுப்பட்டி அணிந்தவாறு பல்கலைக்கழகத்துக்கு வந்திருந்தனர்.

யுத்தநிறுத்தம் செய்து தமிழீழவிடுதலை புலிகளுடன் பேச்சுவார்த்தையை அரசாங்கம்மேற்கொள்ளவேண்டு

(8-ம் பக்கம் பார்க்க)

## இயல்பு வாழ்க்கை ஸ்தம்பிதம்

(மட்டக்களப்பு விசேட நிருபர்)

இலங்கை அரசாங்கம் உடனடியாக யுத்தநிறுத்தத்தை மேற்கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டுமென்று கோரி சுதந்திர மாணவமுன்னணியினரால் விடுக்கப்பட்ட அழைப்பை அடுத்து மட்டக்களப்பு நகரம் நேற்று முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

இக்ஹர்த்தாலை ஒட்டி மட்டக்களப்பு நகரப்பகுதிகளில் பெருமளவு இராணுவத்தினரும, பொலிஸாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது இதனால் நகரப்பகுதி ஆளரவம் அற்று வெறிச்சோடிக் காணப்பட்டது.

சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக சமூகத்தினருக்கு ஆதரவு வழங்கும் வகையில் நேற்று சுதந்திர மாணவர் முன்னணியினால் இக்ஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சுதந்திர மாணவர்அமைப்பு பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தபோதும் இதற்கு இராணுவத்தினர் தடையும் விதித்திருந்தனர். இத்தடையையும் மீறி ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இக்ஹர்த்தாலை அடுத்து போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்வண்டிகள் எதுவும் சேவையில் ஈடுபடா

(8ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின்கலைநிகழ்வு மின்சாரம் துண்டிப்பு

### மட்டு நகர் இருளில்

மட்டக்களப்பு மாவட்டத்தின் 233 வது படையணியினால் நேற்றையதினம் ஏற்பாடு செய் திருந்த பொங்கல் கலை நிகழ்வை யடுத்து மட்டகளப்பு நகரில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

நேற்று மாலைலகலை நிகழ்வு ஆரம்பமாகி சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் மட்டக்களப்பு நகரம் இருளில் மூழ்கியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ந)

## உதயன் இணை ஆசிரியர் விசாரிக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

உதயன் பத்திரிகையின் இணை ஆசிரியர் வித்தியாதரன் நேற்றுக் காலையாழ்ப்பாணம் பொலிஸ் உயரதிகாரியினால் விசாரணைக்கு உட்படுத்கப்பட்டார்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை தொலைபேசி மூலம்தொ

(8ஆம் பக்கம் பார்க்க)

## லக்ஷ்மன் கதிர்காமருக்கு சிஹல உறுமய பாராட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தம் தொடர்பாக, வெளிவிவகார அமைச்சர் வெளியிட்ட கருத்துக்களையும், அறிக்கைகளையும் சிஹல உறுமயவின் தலைவர் திலக்கருணாரட்ண, பாராட்டியுள்ளார்.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு பாராட்டும் நன்றியும் தெரிவித்து சிஹல உறுமயக் கட்சித் தலைவர் திலக்கருணாரட்ண கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தற்துக்கு எதிராகவும், அவர்களது கோரிக்கைகளுக்கு கோழைத்தனமாகப் பணிந்து

(8-ம் பக்கம் பார்க்க)

## வன்னியில் உணவு - மருந்துக்கு பெருந்தட்டுப்பாடு நிலவுகிறது

### கிளி;முல்லை அரச அதிபர்கள் முறையீடு

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாடற் வன்னி மாவட்டத்தில் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் கல்வி சுகாதாரம் போன்ற துறைகளில் கூடியளவு ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாகவும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் அரச அதிபர்கள் கொழும்பில் தெரிவித்துள்ளனர்.

இனவிவகார நல்லெண்ண அமைச்சினால் கொழும்பு வத்தளையில் நடத்தப்பட்ட ''அதே இடத்தில் சேவை'' யில் கலந்து கொள்வதற்காக கொழும்பு வந்திருந்த கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ஐயாத்துரையும், முல்லைதீவு அரச அதிபர் சுந்தரமும் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

நிவாரணங்களை மக்களுக்கு வழங்குவதில் பெரும் சிரமங்களை நாம் எதிர் நோக்க வேண்டியுள்ளது உணவுப் பொருள்கள் வந்தடைவதில் பெரும் சிக்கல் நிறைந்து காணப்படுகிறது இதனால் உள்ளூரில் அரிசி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சிற்றி ஒவ் றிங்கோ காங்கேசனில் தரிக்க இருதரப்பும் இணக்கம்

(கொழும்பு)

'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையே சேவையில் ஈடுபடுவதற்கு பாதுகாப்பு அமைச்சும், தமிழீழ விடுதலைப் புலிகளும் அனுமதியளித்துள்ளதாக சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலைக்கும்பருத்தித்துறைக்கும் இடையே இடம்பெற்ற இக் கப்பல் சேவையை, திருகோணமலைக்கும்காங்கேசன்துறைக்கும் இடையேநடத்துவதற்கே இரு தரப்பும் அனுமதிவழங்கியுள்ளதாகவும், இக் கப்பலில் இடம் பெறும் திருத்த வேலைகள் முடிவடைந்ததும், 'சிற்றி ஒவ் றிங்கோ' மீண்டும் பயணிகள் சேவையில் ஈடுபடுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்,

(இ)

## எரிக்சோல்ஹெய்ம் இன்று கொழும்பு வருவார்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதில் அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடுநிலை ஏற்பாட்டாளராக செயற்பட்டு வரும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் இன்று இலங்கை வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது:

இலங்கைக்கு வரவிருக்கும் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் விடுதலைப்புலிகளின் யுத்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## செங்கலடியில் விறகு வெட்டச் சென்ற எட்டுப்பேரை காணவில்லை

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி பதுளை வீதியிலுள்ள கோப்பா வெளி காட்டுப் பகுதிக்கு நேற்று சனிக்கிழமை காலை விறகு வெட்டச் சென்ற தமிழ் வாலிபர்கள் எட்டுப் பேர் வீடு திரும்பவில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானாவிடம் முறையிடப்பட்டுள்ளது.

செங்கலடிப் பிரதேசத்தில் வசித்துவந்த இவர்களைப் படையினர் கைது செய்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

காணாமற் போனதாகக்

(8-ம் பக்கம் பார்க்க)

## அமைதியான சூழலிலே மக்கள் மீளக் குடியமர விரும்புகின்றனர்

### 'கபோட்'பிரதிநிதி கருத்து

நீதியின்அடித்தளத்தில்கட்டப்படும் நிலையான சமாதானத்தையே தமிழ் மக்கள் விரும்பி நிற்கின்றனர். இதுவே இன்று அவர்களின் அடிப்படையான தேவையென்று கபோட் (CAFOD) நிறுவன பிரதிநிதி ஸ்ரீங் அல்ட்ஸ்ரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில்யாழ்ப்பாணத்துக்கு இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு வருகை தந்த இங்கிலாந்துப் பிரதிநிதி ஸ்ரிங்அல்ட்ஸ்ரன் யாழ்.மக்களின் நிலமை பற்றி மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது;

விடுதலைப்புலிகளின் ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தத்துக்கு அரசு உரிய சாதகமான பதிலளிக்காததனால் யாழ்.மக்கள் மிகவும் கஷ்டத்துடனும், எந்நேரம் எது நடக்குமோ என்ற அச்ச உணர்வுடனும் வாழ்கின்றனர்.

போர்ச்சூழல் தணிந்து அமைதியான சூழலில் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர அனுமதியளிக்கப்படுமானால் தமது சொந்த இடங்களில் குடியிருக்கவே அவர்கள் ஆர்வம் காட்டுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(இ-59)

## சிறு விளம்பரம்

**ஆங்கிலம் விசேடமாக**

O/L, A/L ஆண்டு 8-10, G.A.Q அடிப்படை அறிவிலிருந்து Grammar துரிதமாகக் கற்பிக்கப்படும், ஆசிரியர் B.Sc (Cey), London Inter 85, சிவன் கோவிலடி (சிவன் கோவில் பின்புறம்) திருநெல்வேலி. (2426)

**மணமகள் தேவை**

யாழ். இந்து உயர்குல கௌரவ குடும்பத்தவர் யூ.கே, பி.ஆர் உள்ள எரிபொருள் விற்பனை நிலைய சொந்தக்காரரும், முகாரியும், 12 ல் செவ்வாய் மகம் நட்சத்திரத்தை உடையவரும், 1970 ஆம் ஆண்டு பிறந்தவரும், 05'07'' உயரமுடையவருக்கு மணமகள் தேவை. திருமணம் செய்து யூ.கே. கூட்டிச் செல்வதால் அவரோடு சேர்ந்து வியாபார நிலையத்திற்கு உதவியாக செயல் படக்கூடியசாதாரண ஆங்கிலம் பேசக்கூடிய, ஒடும் பப்பாங்கான பெண் விரும்பத்தக்கது சீதனம் எதிர்பார்க்கப்படும். மாதமுடிவில் யூ.கே. திருப்புவார். ஜாதக விபரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இலக்கம் (2427) வலம்புரி இல. 15 வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம். (2427)

## திருப்பலிப் பூசை

(அளவெட்டி)

மாசியம்பதி புனித செபஸ்ரியார் ஆலயப் பெருநாள் திருப்பலிப் பூசை இன்று காலை 7.30 மணிக்கு அருட்தந்தை ஞானரத்தினம் அடிகளார் தலைமையில் நடைபெறும். (ந-4)

**மனிதனின்**

லாம், மற்றும் இரும்பு. வாகனத் தொழில் செய்தும் பொருள் திரட்டலாம். அல்லது இந்த இடங்களில் உத்தியோகத்தில் அமர்ந்தும் செல்வம் திரட்டலாம்.

**பிறந்தஎண் 4 -விதிஎண் 6**

இவர்கள் ஆடம்பரப் பொருள்கள், இரும்பு, பேரம் பேசுவதில் பொருள் ஈட்டுவர், மருந்துத் தொழிலும் இவர்களுக்குப் பொருந்தும். அல்லது இந்தத் தொழில் சம்பந்தப்பட்ட இடங்களில் அலுவல் பார்த்தும் செல்வம் திரட்டலாம்.

**பிறந்தஎண் 4 -விதிஎண் 7**

இவர்கள் பேச்சாலும், எழுத்தாலும், கலை சம்பந்தமான தொழிலாலும் பெருமளவு பொருள் ஈட்டுவர். மற்றும் ஆடம்பரப் பொருள்கள், அல்லது வாகனங்கள், கமிஷன் தொழிலிலும் இவர்கள் பங்கெடுத்துக் கொண்டு திரண்ட செல்வம் சேர்க்கலாம். அல்லது இவை சம்பந்தப்பட்ட தொழில் செய்யும் இடத்தில் உத்தியோகத்தில் அமர்ந்து செல்வம் சேர்க்கலாம்.

**பிறந்தஎண் 4 -விதிஎண் 8**

இவர்களுக்கு இரும்பு, வாகனம், கமிஷன் ஏஜென்ட் தொழில் மிகவும் பொருந்தும் கைநுணுக்கத் தொழிலிலும் இவர்கள் ஈடுபட்டு மேன்மையுறலாம். அல்லது இவை சம்பந்தப்பட்ட தொழிற்சாலையில் உத்தியோகத்தில் அமர்ந்து செல்வம் திரட்டலாம்.

**பிறந்தஎண் 4 -விதிஎண்9**

இவர்கள் இரும்பு, ஒப்பந்த வேலை, வாகனம் போன்ற தொழில்களில் ஈடுபட்டு மேன்மையுறலாம். பிறருக்குக் காரியம் சாதித்துக் கொடுத்து அதனால் சன்மானம் பெறலாம். அல்லது இவை சம்பந்தமான இடங்களில் வேலைக்கமர்ந்து பொருள் ஈட்டலாம்.

(தொடரும்)

# யதார்த்த பூர்வமான செயற்பாடு எதுவுமின்றி விழாக்களை கொண்டாடுவதில் பயனில்லை

(தென்மராட்சி)

கல்தோன்றி மண் தோன்றாக்காலத்துக்கு முன் தோன்றி பெருங்குடி மக்கள் நாம் என நம்மை நாமே புகழ்ந்து கொள்வதை வழக்கப்படுத்திக் கொள்கின்றோமே யொழிய நாம் எமது சமுதாயத்தில் நிலவுகின்ற வறுமை, அறியாமை, தன்னம்பிக்கையின்மை போன்றவற்றினை இல்லாமல் செய்வதற்கான யதார்த்த பூர்வமான செயல் திட்டங்கள் எதனையுமே செயல்படுத்தாமல் இருந்து வருகின்றோம். இந்த நிலையில் வருடாவருடம் சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி தினத்தை மட்டும் கொண்டாடுவதில் என்ன அர்த்தம் உள்ளது என்பதை நாம் ஆழமாகவும், அகலமாகவும் சிந்தித்துப்பார்க்க வேண்டும்

இவ்வாறு அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கமும் யாழ். மத்திய கல்லூரி இந்து மாமன்றமும் தம்பர் நினைவு மண்டபத்தில் இணைந்து நடத்திய சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி தின மற்றும் சர்வ சமய சமரச தினத்தில் சிறப்புரை ஆற்றிய பிரபல ஆசிரியர் இரா. செல்வ வடிவேல் கூறினார்.

அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மனோகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியசுவாமிகள், வண பிதா எமில்போல் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

யாழ். மத்திய கல்லூரியின் அதிபரும் இந்து மாமன்றப் போசகருமான க இராஜதுரை அங்கு ஆரம்ப உரை நிகழ்த்தினார்.

இரா. செல்வவடிவேல் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

சுவாமி விவேகானந்தருடைய சிந்தனைக்கு ஊடாக இன்றைக்கு யாழ்ப்பாணத்துக்கு வந்தால் இன்று யாழ்ப்பாணம் இருக்கின்ற நிலை வேறாகவுள்ளது. டாம்பீகமாக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு பகுதியினர் ஒரு பக்கத்திலும், மறு பக்கத்தில் இழிநிலை என்று சொல்லப்படுகின்ற மிகவும் தாழ்ந்த நிலையில் வறுமைக்குள் வறுமையான எல்லைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மறுபகுதியினர்.

சுவாமி விவேகானந்தரை நினைக்கின்ற நாம் செய்ய வேண்டிய முதல் பணி என்ன என்பதுபற்றிச் சிந்தித்துச் செயற்படவேண்டும். எமது மக்கள் மத்தியில் நிலவுகின்ற வறுமையை இல்லாதொழிக்கப்பாடுபடல் வேண்டும். யாழ்ப்பாணத்திலே நாம் காணமுடியாத ஒன்றைக் கண்டுகொண்டிருக்கிறோம். மக்கள் மத்தியில் நிலவும் அறியாமையைப் போக்குகின்ற இருளை அகற்றுகின்ற ஒளியினுடைய அந்தத் தன்மை இங்கே குறைந்துவிட்டது. சுவாமியினுடைய நினைவு தினங்களைக்கொண்டாடுகின்ற நாம் நம்முடைய சிந்தனைகளையும், பாதைகளையும் சுவாமியினால் கூறப்பட்ட நோக்கில் திறந்துவிடவேண்டும். அதை நோக்கி நாம் நகரவேண்டும்.

ஒரு இளைஞனுக்கு தன்னம்பிக்கையை ஊட்டாத கல்வி நமக்குத் தேவை தானா? என நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எமக்குத் தேவை தன்னம்பிக்கை தான். அதனை நாம் இன்று இழந்துவிட்ட நிலையினால் தான் நாம் வாடி வதங்குகின்றோம். நல்ல நோக்கில் சிந்தனையைத் திருப்பிவிட முடியாதவர்களாக இருக்கின்றோம்.

எனவே சுவாமி விவேகானந்தர் காட்டிய வழியில் நாம் வாழ முற்படுவோமாயின், எமது மாணவர்களுக்கு தன்னம்பிக்கையைப் போதிக்கின்ற கல்வியைப் போதிக்க வேண்டும் என்றார். (க-77)

## இலங்கையின் சிறந்த மாநகரசபை மாத்தளை

(கண்டி)

இலங்கையின் சிறந்த மாநகரசபையாக மாத்தளை மாநகர சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து சபையிலுள்ள பன்னிரண்டு உறுப்பினர்களும் மாத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் மூவரும் இந்தியாவிற்கு செல்ல இருக்கிறார்கள்.

மேற்படி தெரிவையடுத்து பரிசும் சான்றிதழும் இந்தியா செல்லும் வாய்ப்பும் கிடைத்ததாக மாநகர முதல்வர் தெரிவித்தார். (து)

## மினிசினிமா கொட்டகை நயினையில் அதிகரிப்பு

(ஊர்காவற்றுறை)

சட்ட விரோதமாக மினி சினிமா கொட்டகைகள் நடத்துவோர் தொகை அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக நயினாதீவுப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இச் செயற்பாடுகளினால் கற்பித்தல் செயற்பாடுகளில் பெரும் தடங்கல் நிலை ஏற்படுவதாகவும் பெரிதும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இது விடயம் தொடர்பாக உரிய விதத்தில் இறுக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது (க-75)

## யாழ். போதனா வைத்திய சாலையில் நோயாளர் அதிகரிப்பு கட்டில்களுக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம)

யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெறும் நோயாளர் எண்ணிக்கை அண்மைக்காலமாக வெகுவாக அதிகரித்துக் காணப்படுவதனால் அங்கு கட்டில்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படுவதை நேரில் அவதானிக்க முடிகிறது.

பெருமளவு நோயாளிகள் கட்டில்களின்றி நிலத்தில் பாய் விரித்து நித்திரைசெய்ய வேண்டி உள்ளதாகவும் மருத்துவ விடுதி 2'3' ஆகியவற்றில் தங்குவோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறுது. (க-12)

## வேலணையில் பயன்படுத்தப்படாத நிலையில் கொல்களம்

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பிரதேச சபைக்குச் சொந்தமான கொல்களம் பயன்படுத்தப்படாத நிலையில் இருப்பதாகத் தெரிய வருகின்றது

அராலிப் பகுதியில் அமைந்துள்ள கொல்களம் தொண்ணூற்றி எட்டாம் ஆண்டு (1998) பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டு நிதியில் இருந்து ஒரு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

மேற்படி கொல்களம் அமைக்கப்பட்டதில் இருந்து இன்று வரை அவ்விடத்தில் கால்நடைகள் எதுவும் கொலை செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும வேலணைப் பகுதியில் மாட்டிறைச்சிக் கடை ஆரம்பிப்பதற்கு வேலணையிலுள்ளபலஇந்து அமைப்புக்கள, மற்றும்பொது அமைப்புக்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பி வருவது ஏற்கனவே அறிந்ததே. (க – 72)

## ஆன்மீக கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வட-பிராந்தியசத்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக் குழுஇளைஞர்பிரிவினர்நடாத்தும்'' மனித மேம்பாடுகள் ஊடாக ஆன்மீகம்''என்னும் பொருளிலான ஆன்மீக கண்காட்சி எதிர்வரும் 26,27ஆம் திகதிகளில்யாழ் இந்துஆரம்ப பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

வட பிராந்திய இணைப்புக் குழுத் தலைவர் வே.சேனாதிராஜா, தலைமையில் நடைபெறும். மேற்படி நிகழ்வில் யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) யாழ்.கல்விவலையப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் உட்பட பிரமுகர்கள் பலர், கலந்துகொள்வர். (க-104)

## மரதன் ஓட்டப் போட்டி

யாழ் மத்திய கல்லூரியின் 185ஆவது ஆண்டு நிறைவையொட்டி இம் மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிக்கு முன்னோடியாக நாளை ஏழரை கிலோ மீற்றர் தூர மரதன் ஓட்டப் போட்டியொன்று நடைபெறவுள்ளது.

இவ் ஓட்டப்போட்டி மத்திய கல்லூரியிலிருந்து ஆரம்பமாகி பிரதான வீதி, கோயில் வீதி, நாவலர் வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதியூடாக கல்லூரியின் மைதானத்தை வந்தடையவுள்ளதாக அதிபர் கே. ராஜதுரை தெரிவித்துள்ளார். (வ)


## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர் !

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் தை மாதம் 9 ஆம் நாள் (22.01.2001) திங்கட்கிழமை காலை 6.30 மணி முதல் 7.45 மணி வரையுள்ள மூல நட்சத்திர சுபமுகூர்த்த வேளையில்

திரு. திருமதி. சடாட்சரம் தம்பதிகளின் புத்திரன் திருநிறை செல்வன்
**புலேந்திரன்**
அவர்களுக்கும்

திரு. திருமதி. செந்திராஜா தம்பதிகளின் புத்திரி திருநிறை செல்வி
**ஜெயகௌரி**
அவர்களுக்கும்

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப் பெற்று கொக்குவில் மாத்தனை கந்தசுவாமி ஆலயத்தில் முருகன் திருவருள் துணையுடன் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து மணமகள் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்,

**திரு. திருமதி. ஜெகசோதிமலர் சடாட்சரம்**
43, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

**திரு திருமதி ச. புவிச்சந்திரன்**
வினோ நகைப் பூங்கா, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**திரு. திருமதி. ஜெ. செந்திராஜா**
அபிராமி அச்சகம், சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(இரு வீட்டார் அழைப்பு) (கி-1344)

# போர் அவலங்களின் மத்தியிலும்

# யாழ். மண்ணில் துளிர்விடும் பரதக்கலை

பரதநாட்டியக் கலையில ஆர்வமுடையவர்களை ஊக்குவிக்கும் வகையில் யாழ் மண்ணில் பரதநாட்டியக் கலையில் தனக்கென வொரு தனியிடத்தை வகித்து வரும் நடன ஆசிரியை **திருமதி வசந்தி குஞ்சிதபாதம்** அவர்களுடனான செவ்வி இங்கு பிரசுரமாகிறது. (ஆ-ர்)

● எந்த ஒரு கலைஞருக்குமே அந்தக் கலையை முறையாகக் கற்றுத்தந்து உயர்த்திவிட்டவர் என்று ஒரு ஆஸ்தான குரு இருப்பார் அந்த வகையிலே உங்களை பரதக்கலையில் பிரபலமாக்கிவளர்த்தெடுத்தவர்யார்? அவரைப் பற்றி சில வார்த்தைகள் கூறமுடியுமா?

☐ என்னை இந்தக் கலையில் தேர்ச்சி பெறச்செய்து எனக்கு ஊக்கம் அளித்தவர் எனது வணக்கத்திற்குரிய குரு அமரர் ஏரம்பு சுப்பையா அவர்களாவார். இவர் கொக்குவில்மேற்கைச் சேர்ந்த 'கலா பவனம்' எனும் நாட்டியப் பள்ளியை நடத்தி வந்தவர். அடுத்ததாக என்னுடைய குருவாக இருந்தவர் அடையாறு பரதகலா கேந்திர நாட்டியப் பள்ளி ஆசிரியர் பிரம்ம ஸ்ரீ அடையாறு லக்ஷ்மன்.

● இவர்களிடம் நீங்கள் நடனம் கற்றுக் கொண்ட போது உங்கள் அனுபவங்கள்?

☐ நான் எனது எட்டாவது வயதில் இவரிடம் கலைபயிலச் சென்றேன். சேர்ந்த ஓரிரு நாட்களிலேயே எனது குருவின் கவனத்தை ஈர்ந்த மாணவியருள் நானும் ஒருத்தியானேன். இதற்கு எனது கலைப் பரம்பரையும் காரணமாக இருக்கலாம். எனது குரு தன்னிடம் கற்கும் மாணவிகளிடம் என்னென்ன திறமைகள் ஒளிந்திருக்கின்றனவோ அவற்றை எல்லாம் வெளிக்கொணர்ந்து அவர்களை மேலும் நடனத்தில் ஆர்வத்தை உண்டாக்கும்தன்மையுடையவர்இவ்வாறானஆசானிடம் நான் பயின்றது எனது பெரும்பாக்கியமே. பின் இந்தியாவில் அடையாறு லக்ஷ்மன் சார் இடம் கற்றபோதும், எனது குருவிடம் பயின்றவற்றை மெருகூட்டும் வகையில் பயிற்சிகளை நல்ல முறையில் பெறமுடிந்தது.

● உடம்பிற்கு உயிர் போல இந்த நாட்டியக்கலைக்கு அடிப்படையாக இருக்க வேண்டியது எது என்று நீங்கள் கருதுகின் றீர்கள?

☐ நாட்டியக்கலையை பொறுத்தவரையில் அடிப்படையாக இருக்க வேண்டியது அங்கசுத்தம், லயம், பாவம் ஆகிய மூன்றும் முக்கியமே அத்துடன் பொறுமையும், குரு பக்தியும் இறை பக்தியும் கட்டாயம் இருக்க வேண்டிய ஒன்றாகும்.

● இத்தனை வயதுக்குள் தான் பரதநாட்டியம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஏதாவது வரை முறை இருக்கின்றதா?

☐ கலைக்கு வயதில்லை ஆனால் நம்மிடையே பல பேர் திருமணம் முடித்ததும் மேடையேறுவதில்லை. பரதநாட்டியத்தை பொறுத்தவரைஇளவயதில் ஆரம்பிக்காவிடில் பயிலுவதுசிரமம். பரதநாட்டியம் ஒரு சிறந்த உடற்பயிற்சிபோல் புத்துயிர் அளிக்கிறது.

● எந்த Crealive work மாதிரியும் நாடகமும் ஒரு யாகம் மாதிரியேதான். நினைப்பது கிடைக்க மணிக் கணக்காக நாள் கணக்காக இருக்க வேண்டியிருக்கலாம் இவையெல்லாம் திருமணத்திற்கு முன்பானால் கவலையில்லை. திருமணத்திற்கு பின்னர் தாரமாக தாயாக மாறிப்போன பின்னர் உங்கள் இஷ்டப்படி இருக்க முடிகின்றதா?

☐ திருமணத்திற்கு முன்னர் நபுன செயற்பாடுகளுக்கு எவ்வளவு நேரம் ஒதுக்கினேனோ அதேயளவு நேரம் இப்பொழுது கிடைக்காவிடினும் ஓரளவு நேரத்தை இப்பொழுதும் செலவிடுகிறேன். எனது கணவர், பிள்ளைகள் எல்லோரும் எனது முயற்சிக்கு எப்பொழுதும் பக்க பலமாக இருப்பதால் என்றென்றும் பரதத்திற்காக என்னை அர்ப்பணிக்க முடியும்.

● உலக அளவிலே நோக்கும் போது பரதநாட்டியத்திலே நாம் மிகவும் பின்தங்கி இருக்கின்றோம் என்று உணர்கின்றீர்களா? அதற்குரிய காரணங்கள் என்ன என்று ஏதாவது புலப்படுகின்றதா?

☐ பரதநாட்டியம் என்று கருதினால் அது இன்று உலகெங்கும் மக்களிடையே மதிப்பாக போற்றப்படுகின்றது. ஆனால் இலங்கையில் சில கலைஞர்கள் திருமணமானதும் வெளிநாடு செல்கின்றார்கள். அவர்கள் கலையை அங்கு வளர்க்கிறார்கள். இங்குள்ள கலைஞர்களுக்கு திறமையிருந்தும் அதை வெளிக்கொணருவதற்கு பல வசதியீனங்களும், போக்குவரத்து தடைகளாலும் பின்னடைகிறது. இங்கு வளரும் கலைஞர்கள் சிலர் உழைப்பையும், ஊதியத்தையுமே கருத்திற்கொண்டு கற்பதும், கற்பிப்பதும் தான் காரணம் என நான் நினைக்கிறேன்.

● ஆண்கள் பரதநாட்டியம் கற்றால்ஒரு Feminine Look வந்து விடுகிறது. தேவையில்லாமல் பெண்கள் போல் நளினமாக நடந்து கொள்வார்கள் என்று ஒரு பயம் இருக்கின்றது. ஆண்கள் அதிகம் நடனம் கற்றுக் கொள்ளாததற்கு இது தான் காரணமா? இந்த விடயம் பற்றி உங்கள் சிந்தனைகள் எப்படி?

☐ ஆண்கள் அதிகமாக ஆர்வம் காட்டாததற்கு இதுவும் ஒரு காரணமாக அமையலாம். ஆனால் பிரபல நடனக் கலைஞர்கள் இலங்கை இந்தியாவிலும் சரி ஆண்கள் தான் என்று குறிப்பிடவிரும்புகிறேன். ஆண்கள் நடனம் பயின்று கொண்டால் அவர்கள் சாதாரணமான இயல்புகளையோ, பழக்கவழக்கங்களையோ மாற்றிக் கொள்ளக் கூடாது. அதை ஏற்றுக் கொள்ளவும் முடியாது. அவர்களும் ஏனையோரைப் போலவே செயற்பட வேண்டும். என்னிடம் 15 ஆண்கள் நடனம் கற்றுக் கொண்டார்கள். அவர்கள் பிற நாட்டிலும் அரங்கேற்றம் முடிந்தும் நல்ல தொழிலும், வளாகத்திலும் சிறப்புற்று விளங்குகிறார்கள்.

● தங்களது கலை வாழ்வில் பரத நாட்டியத்தில் உங்களைத் தவிர உங்களுக்கு பிடித்தவர் யார்? (II) எவ்வாறு பிடித்துப் போவதற்கு அவர்களிடம் காணப்படும் சிறப்பம்சங்கள்?

☐ இத்துறையில் ஈடுபட்டிருக்கும் அனைவரையுமே பிடிக்கும். குறிப்பாகச் சொல்லப் போனால் திருமதி சாந்தினி சிவநேசன், திருமதி கிருஷாந்தி இரவீந்திரன், திருமதி பத்மினி செல்வேந்திரகுமார், திருமதி யசோதா விவேகானந்தன், திருமதி நந்தினி சிவராஜா போன்றவர்களை முறையே சிறந்த நட்டுவாங்கம், லயம் அனுபவம், புதுமையான நுணுக்கங்கள் நடன அமைப்பிற்கான dea, Forma, Tion, Creation போன்றவற்றிற்காக பிடிக்கும் ஆண்களில் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயாவை, என்னென்று சொல்வது. அவரது கற்பனைவளம், அவருடைய ஆக்கங்கள்எல்லாமே தனித்துவம் பெற்றவை.

● பரதத்தில் புதுமைகளை புகுத்தினால் அதன் பாரம்பரியம் கெட்டுப் போகுமென்று கருதுகிறீர்களா?

☐ பரதத்தில் ஒரு வரையறைக்குள் புதுமைகளை புகுத்தினால் அதன் பாரம்பரியம் இம்மியளவேனும் குறைந்து விடாது என்பது எனது கருத்து.

கடந்த காலத்தில் அதாவது 1984ஆம் ஆண்டு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடன ஆசிரியராக கடமை புரிந்த காலத்தில் கலாநிதி மெளன குருவின் நெறியாள்கையின் கீழ் புதிய ஆக்கமான விடிவு என்ற நாட்டிய நாடகத்தில், பலே, கதகளி போன்ற ஆடல் வடிவங்களை புகுத்தி பெரும் புகழையும், வெற்றியையும் பெற முடிந்தது இது மட்டுமல்ல புதிய ஆக்கமாக ''எறும்பு தந்த பாடம்'' என்ற நாட்டிய நிகழ்ச்சியை யாழ். சுதுமலை சிம்மய பாரதிவித்தியாசாலை மாணவர்கள் மூலம் செய்து வெற்றி காண முடிந்தது.

● தாங்கள் இதுவரை காலமும் செய்தநடன நிகழ்வுகள் பற்றி

☐ யாழ். இளங்கலைஞர் மன்ற வருடாந்த நடன நிகழ்வுகளில் என்னிடம் பயின்ற மாணவர்களை (ஆண்கள்) கொண்டு ''கர்ணன்'' எனும் நாட்டிய நாடகத்தை அளித்தேன். அது மிகவும் சிறந்த முறையில்அமைந்தது. பலரின் பாராட்டை பெற்றது. வேம்படிமகளிர் கல்லூரி மாணவர்கள் மூலம் செய்யப்பட்ட சசிரேனை, கண்ணகி, வித்யாலட்சுமி என்பன போன்ற நடன நிகழ்வுகள் மன நிறைவையும் புகழையும் தந்தவையாகும். மிக அண்மையில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரிமாணவிகளைக்கொண்டு உருவான ''நேற்று இன்று நாளை'' எனும் புதியஆக்கம் மூலம் சில புதுமையான கோணங்களில் முயற்சிசெய்திருக்கின்றேன். அந்த நிகழ்வில் Western பலே, கதக், குச்சுபுடி போன்ற எல்லாவற்றையும் கலந்துள்ளேன்.

☐ எந்த ஒரு கலையைப் பயிலும் போதும் அதில் முழு ஆர்வத்துடனும் அவர்கள் தங்களை இணைத்துக் கொள்ளவேண்டும். உச்ச அளவில் முயற்சிசெய்யவேண்டும். பயிலும் குருவிடம் மதிப்பும் மரியாதையும் வைத்துச் செயற்படவேண்டும். அது மட்டுயல்லாது எல்லாம் வல்ல இறைவனையும் தவறாது வழிபட்டுவரவேண்டும். இவ்வாறு பயிலும் கலையை பிற்காலத்தில் அழிந்துபோகவிடாது சமுதாயத்திற்கு பரப்பி அதனை நிலைகொள்ளச் செய்யவேண்டும்.

பேட்டி வழங்கியவர்

**திருமதி வசந்தி குஞ்சிதபாதம்**

பேட்டி கண்டவர்-

★ **நரேன்** ★

## ஐ.தே.க யின் புதியபிரேரணை விரைவில் பாரளுமன்றில்?

(கொழும்பு)

மூன்று சுயாதீன ஆணைக் குழுக்களைஅமைக்கக்கோரும் பிரேரணை ஒன்றை ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளது.

பொலிஸ் சேவை, தேர்தல் நீதி மற்றும் பொதுச் சேவை ஆகியவற்றிற்கு சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்குமாறு ஐக்கிய தேசிய கட்சி கோரவுள்ளது.

இது தொடர்பாக தாம் அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தம் ஜனவரி 31 ஆம் திகதியுடன் முடிவடைவதையடுத்தே இது தொடர்பாக தாம் பிரேரணை ஒன்றைக் கொண்டு வரவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி அறிவித்துள்ளது.

(க-5)

## பாண்டியன் தாழ்வில் ஈக்களின் பெருக்கம் மீளக்குடியமர அச்சம்

(ஈச்சமோட்டை)

பாண்டியன் தாழ்வில் ஈக்களின் பெருக்கம் வெகுவாக அதிகரித்துக் காணப்படுவதையடுத்து மக்கள் மீளக்குடியாமருவதில் பெரும் சங்கடங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் இராணுவத்தினர் நிலைகொண்டதையடுத்து அமைக்கப்பட்ட பதுங்கு குழிகளிலேயே இத்தகைய ஈக்களின் பெருக்கம் அதிகமாக உள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவிடயம் குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தகவல் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-59)

## சண்டிலிப்பாயில் செயலணிக் கூட்டம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பின்வரும் திகதிகளில் சமுர்த்திச் செயலணிக்குழு அமைப்பதற்கான கூட்டம் நடைபெறுமென்று சமுர்த்தித் தலைமை முகாமையாளர் அறிவித்துள்ளார்.

நாளை 22ஆம் திகதி ஜே153 பெரியவிளான், 23ஆம் திகதி செவ்வாய் ஜே132 உயரப்புலம், 25ஆம் திகதிஜே130சுதுமலைதெற்கு 26ஆந் திகதி ஜே145 வடலியடைப்பு, 27ஆந் திகதி ஜே129 சுதுமலை வடக்கு, 29ஆம் திகதி ஜே151 மாதகல் தெற்கு, 30ஆந் திகதி ஜே147 பிரான்பற்று, ஜே148 சில்லாலை வடக்கு, ஜே149 சில்லாலை தெற்குஆகிய கிராம சேவையாளர்பிரிவுகளில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் 18 வயதிற்கும் 35வயதிற்குமிடைப்பட்ட இளைஞர் யுவதிகள் அனைவரும் தவறாது சமூகந் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(க - 120)

## வீருகள் அழிப்பு

(வடமராட்சி கிழக்கு)

கொழும்புத்துறை முதல் கண்டி வரையான கரையோரப் பகுதியிலுள்ள வீடுகள் அழிக்கப்பட்டு, பாரிய பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அப்பகுதிகளுக்கு சென்று திரும்பிய மக்கள் ஜனநாயகப் பேரவையின் பிரதிநிதி யொருவர் தெரிவித்துள்ளார். (இ-43)

## படையினர் சோதனை

(ஈச்சமோட்டை)

நாவலர் வீதியும் வைமன் வீதியும் சந்திக்கும் சந்திப் பகுதியில் இராணுவத்தினர் திடீர் வீதிச் சோதனையில் நேற்று ஈடுபட்டனர்.

அச்சந்தியினூடாக போக்குவரத்து மேற்கொண்ட அனைவரையும் நிறுத்தி அடையாள அட்டை பரிசிலிக்கப்பட்டதுடன் உடல் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. (க-59)

## காவலூரில் கண்காட்சி

(ஊர்காவற்றுறை)

தையல் டிப்ளோமா கண்காட்சி எதிர்வரும் 26,27 ஆம் திகதிகளில் ஊர்காவற்றுறை தையல்பயிற்சி நிலையத்தில் இடம் பெற உள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல், வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள உதவிப்பணிப்பாளர் இ.இரவீந்திரன் உட்பட பிரமுகர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொள்வர்.

கடந்த வருடம் தையல் பயிற்சி பெற்ற 30 பேருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் உதவியுடன் இந்நிகழ்வு இடம் பெறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

(க)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை புங்கடி அம்பலவாணேஸ்வரர் ஆலயத் தில் இன்று பண்டிதர்- மு. கந்தையா தலைமையில் திருவாசக முற்றோதுதல் இடம் பெறும். (ந)

## செய்தித் துளிகள்

### பொலிஸ் அதிகாரி கைது

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் அதிகாரி ஒருவர் மோசடி தொடர்பாக சீ. ஐ. டி. யினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கொழும்பு பிராந்திய மத்திய பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் காமினி விஜயசூரிய என்பவரே 5 இலட்சம் பெறுமதியான களவாடப்பட்ட பொருட்களை வைத்திருந்ததற்காகவும் அது தொடர்பாக 84 மில்லியன் 5 லட்சத்து 51 ஆயிரம் காசோலையை மோசடி செய்ததற்காகவும் சீ. ஐ டி இனரால் கடந்த திங்களன்று கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (தி)

### மிதி வெடியில் கால் இழப்பு

(யாழ்ப்பாணம்)

செம்மணி குடியிருப்புக்குள் சென்றநபர்ஒருவர் மிதிவெடியில்சிக்கி இடதுகால்துண்டிக்கப்பட்டநிலையில் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார் இச்சம்பவத்தின் போதுகுணானந்தன் ஜெயதீஸ்வரன்(வயது21)என்பவரேமிதிவெடியில் சிக்கிகாலைஇழந்தவராவார்.

இச்சம்பவம் பற்றிமேலும் தெரியவருவதாவது மிதிவெடியில்சிக்கி காலை இழந்தவருடன் 15பேர்கூடச்சென்றதாகவும் வெடிச்சத்தத்தைத் தொடர்ந்து அப்பகுதிக்கு இராணுவம் விரைந்ததாகவும் காயப்பட்டவரையும் ஏனையோரையும் வாகனத்தில்ஏற்றிச் சென்றதாகவும் தெரியவருகிறது. (வ.12)

### மூவரைப் பதம் பார்த்த விசர்நாய்

(மந்திகை)

சரவெட்டிப் பகுதியில், ஒரேநாளில் விசர்நாயினால் கடியுண்ட மூவர் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

கரணவாய்மேற்கைச்சேர்ந்தியாகர் செல்லப்பாக்கியம் (வயது-82) இதே இடத்தை சேர்ந்த தம்பிராசா, ஆனந்தராசா (வயது-38) நெல்லியடி கிழக்கை சேர்ந்த பொன்னுத்துரை நாகேஸ்வரி (வயது-63) ஆகியோரே விசர் நாயினால் கடியுண்டவர்களாவர். (உ-23)

### மனநோயாளரை உறவினர் புறக்கணிப்பு

(கொழும்பு)

அங்கொடை மற்றும் முல்லேரியா மனநோயாளர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று பூரணமாக குணமடைந்துள்ள ஆயிரத்து 165 பேர் தொடர்ந்தும் அங்கேயே தங்கி இருப்பதாக கூறப்படுகிறது.

இவர்களை வந்து அழைத்துச் செல்வதில் உறவினர் காட்டும் அக்கறையின்மையே இதற்கு காரணமாகும். (உ)

### காணாமல் போன 36படையினர் கைது

(கொழும்பு)

நிக்கரவெட்டிய பகுதியில் பொலிசார் ஆறு மணி நேரம் சுற்றிவளைப்புத் தேடுதலின் போதுஇராணுவத்தில்இருந்து தப்பி ஓடிய36பேர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்த இப்படையினரைபொலிசார்இராணுவ தலைமைக் காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளனர். (இ)

### பாதுகாப்புக் கல்வி

(கோப்பாய்)

பாதுகாப்புக் கல்வியின் முக்கியத்துவம் சம்பந்தமான சுற்றறிக்கை யாழ். வலயப் பாடசாலைகட்கு யாழ். வலயக் கல்வி மேம்பாடு கல்விப் பணிப்பாளரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன்பெற்றோர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் அறியக்கூடிய வரையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

விபத்து என்பது எதிர்பாராமல் ஏற்படுவது ஒன்று எனவும் விபத்தில் இருந்து தப்பிக் கொள்வதற்காக வழிமுறைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(உ-79)

### அரச நிவாரணம்

(கொழும்பு)

ஐயாயிரம் ரூபா வரை மாத வருமானம பெறும் சகல குடும்பங்களும், இயற்கை அனர்த்தத்தினால் ஏற்படும் பாதிப்புக்களுகு இழப்பீடாக அரசாங்கத்தின் நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

ஆயிரம் ரூபாவுக்குட்பட்ட மாத வருமானம் பெறுபவர்களுக்கு மாத்திரமே இயற்கை அனர்த்தத்தினால் ஏற்படும் பாதிப்புக்கு முன்னர் நிவாரணம் வழங்கப்பட்டது. ஆனால் புதிய அறிவிப்பின்பிரகாரம் இவ்வருமான எல்லை ஐயாயிரம் ரூபாவரை அதிகரிக்கப்பட்டுள்ளது (இ)

### வேலணையில் மரம் நடுகை

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பிரதேசசபையினரால்பிரதானவீதியோரங்கள் இருமருங்கும் பொது இடங்களிலும் நிழல் தரக் கூடிய பயனுள்ள மரக்கன்றுகள் நடுகைசெய்யப்பட்டு வருகின்றது.

பிரதேசசபை நிதியில் இருந்து இடம்பெறும் நிழல் தரும் மரம்நடுகை செய்யும் திட்டத்தில் சுமார் ஆயிரம் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

மேலும் மலைவேம்பு,காட்டுத்தேக்கு, சயண்டலை ஆகிய மரக்கன்றுகளே மரம் நடுகைசெய்யப்படுவதாகவும், அக்கன்றுக்கு பாதுகாப்பக சுற்றி கூண்டு அடைக்சப்பட்டுவருவதாகவும் அராலியில்இருந்து பிரதான வீதிகள் இருமருங்கும் நடுகைசெய்யப்பட்டுள்ளதுடன் பொதுஇடங்களில் நடுகை செய்யும் நடவடிக்கை இடம்பெறுவதாக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி தெரிவித்தார்.

(க-75)

### பாராட்டு விழா

(கொழும்பு)

தமிழக அரசின் திரு.வி.க. விருதுபெற்ற பேராசிரியர் சிவத்தம்பிக்கு பாராட்டு விழா ஒன்றை நடத்தகரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையினர் ஒழுங்கு செய்துள்ளார்கள்.

வரும்மாதம் 3 ஆம் திகதி மாலை 5 மணிக்கு கொழும்பு இராம கிருஸ்ண மிஷன்மண்டபத்தில் மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தஜீ தலைமையில் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் சிவத்தம்பி பற்றி எழுதப்பட்ட ''கரவையூற்று'' நூலும் வெளியிடப்படும். (தி)

# பலாலி ஆசிரியர் கலாசாலையை தீவகத்தில் அமைக்க கோரிக்கை

## அமைச்சருக்கு அவசர கடிதம்

(மண்டைதீவு)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை தீவகத்தில் அமைப்பதற்கு உதவுமாறு மண்கும்பான் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தீவுப்பகுதி தெற்கு பிரதேச சபைத் தலைவரும் அப்பகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான ந. கருணாகர குருமூர்த்தி ஊடாக, மேற்படி சங்கம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எழுதிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

எமது பிரதேசத்தில் கல்வியியல் கல்லூரியை அமைக்க தாங்கள் எடுத்த முயற்சி துரதிஷ்டவசமாக கைகூடவில்லை

இந்நிலையில் பலாலி ஆசிரியபயிற்சி கலாசாலையை பலாலியில் அமைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இல்லாததனால் அதனை வேறு இடத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எனவே இக்கலாசாலையை எமது பிரதேசத்தில் அமைக்க உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-11)

## இராசி பலன்

21/01/2001

(தை 8, ஞாயிறு)

துவாதசி பி. ப 1.24 வரை

கேட்டை மு.ப 10.37 வரை

ராகுகாலம் 5.05 - 6 35

சுபநேரம் 9 35 - 11.05

பிரதோச விரதம்

**மேடம்**

கட்டுப்பாடு, உடல் உபாதை, பிரயாணம், காரிய தாமதம்.

**இடபம்**

எதிர்பாரத அச்சம், வியாதி, பிரயாண பயம், முயற்சி தடங்கல்.

**மிதுனம்**

விருந்துபசாரம், சுவாரஸ்யம், வாகனவசதி, காரியம் கைகூடும்.

**கடகம்**

புதிய முயற்சி, நோய்குணமடையும், சந்தோசம், முயற்சி கைகூடும்.

**சிங்கம்**

குடும்பக் கவலை, முயற்சி தடங்கல், தாழ்வு நிலை எதிர்பாராத நன்மை.

**கன்னி**

பயந்த சுபாவம், தன்னம்பிக்கைக் குறைவு, முயற்சி தாமதம், ரோகம்.

**துலாம்**

தடுமாற்றம், பிரயாணம், தனவரவு, நினைத்த காரியம் கைகூடும்.

**விருச்சிகம்**

வாக்குக் கலகம், தனவிரயம், கௌரவக்குறை, காரிய தாமதம்.

**தனுசு**

கற்பனை மிகுதி, ஜனவசியம், புதிய பொருள் சேர்க்கை, குடும்ப சுகம்.

**மகரம்**

உஷ்ண ரோகம், பிரயாணம், உணர்ச்சி வசப்படல், காரிய அலைச்சல்.

**கும்பம்**

தனலாபம், கீர்த்தி, மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு.

**மீனம்**

தொழில் மேன்மை, அதிகாரம், முயற்சிகள் கை கூடும், நன்மை விருத்தி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## அட்டாளைச் சேனையில் டெங்கு பரவல் தீவிரம்

அட்டாளைச் சேனையில் முதலாவது தடவையாக டெங்குக்காய்ச்சலினால்14 வயது மாணவியொருவர் பீடிக்கப்பட்டிருப்பது அப்பகுதி வைத்திய அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து வைத்திய அதிகாரிகள் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று ஆகிய பகுதிகளிலும் மற்றும் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

தற்போது அட்டாளைச் சேனையில் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருக்கும் மேற்படி மாணவி முன்பு நீர்கொழும்பில் வசித்து வந்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

(க-4)

## ஒரே இரவில் பல திருட்டு ஏழாலையில் சம்பவம்

ஏழாலை மேற்கில் ஒரே இரவில் பல திருட்டுச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

தங்கவேல் என்பவரின் வீட்டில் நீர் இறைக்கும் இயந்திரம், சைக்கிள் என்பன உட்பட பல பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இதேவேளையில்,

வேறு ஒரு வீட்டிலிருந்து குசினிக்குள் நுழைந்து கறி மற்றும் பாண் என்பவற்றையும் உட்கொண்டு விட்டுச் சென்றுள்ளனர்.

(க-25)

## வெள்ளத்தில் மிதந்த காய்கறி வகைகள்

### சுன்னாகத்தில் சம்பவம்

யாழ்ப்பாணப் பகுதியில் சில தினங்களாக தொடரும் மழையினால் சுன்னாகச் சந்தையில் காய்கறிகள மற்றும் வியாபாரப்பொருட்கள் யாவும் வெள்ளத்தில் மிதந்ததாக நேரில் கண்டோர் தெரிவித்தனர்.

சுன்னாகப் பகுதியில் கொட்டகை போடப்படாத இடங்களில் வைத்து வியாபாரம் செய்யப்பட்ட பொருட்களே மழையில் நனைந்துள்ளன.

சில அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மேற்படி சந்தைக் கட்டடம் புனரமைக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-25)

## மட்டக்களப்பில் சமாதானம்வேண்டி தியானப் போராட்டம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதான பேச்சுவார்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி அரசியல் யாப்பை மாற்றியமைப்பதற்கான பிரஜைகள முன்னணி நாடு தழுவிய ரீதியாக ஆர்ப்பாட்ட பேரணிகளை நடாத்தவுள்ளது.

இது தொடர்பாக அரசியல் யாப்பைமாற்றுவதற்காக பிரஜைகள் முன்னணி அமைப்பானது எதிர்வரும் 29'30.31 ஆம் திகதிகளில் வவுனியா மன்னார் மாவட்டங்களிலும் பேரணி நடத்தஏற்பாடு செய்துள்ளது.

இதே வேளை இம்முன்னணியுடன் சமாதானத்திற்கான சர்வமத அமைப்பும் இணைந்து எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய் கிழமையன்று மட்டக்களப்பில் சமாதானத்திற்கான தியானப் போராட்டமொன்றினை நடாத்தவுள்ளது.

இப்போராட்டத்தில் பல தொண்டர் அமைப்பினரும் அரசு சார்பற்ற நிறுவனங்களும் கலந்து கொள்ளவுள்ளானர். (வ)

## குற்றச்செயல் அதிகரிப்பு படையினரே காரணம்

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பெருகிவரும் குற்றச் செயல்களுக்கு இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களே காரணமென கொழும்புப் பிராந்திய பொலிஸ்மா அதிபர் போதியனகே தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகளுடன் யுத்தம் இடம் பெற்று வருவதனால் பெரும் தொகையான பொலிஸாரும் இராணுவத்தினரும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இதனால் தென் பகுதியில் பொலிசாரின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகிறது. இதன் காரணமாக இக்குற்றச் செயல்களை தடுக்க முடியாதிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதே வேளை நாட்டில் இடம் பெற்று வரும் குற்றச் செயல்களை குறைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிக்காவின் பணிப்பின் பேரில் மூன்று பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டிருப்பதாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி. எம். ஜயரத்தினா தெரிவித்துள்ளார். (வ)

## இன்று ஒரு தகவல்

# பற்களைப்பேணவேண்டும்

பல், தொண்டைக் குழாய் குடல் ஆகிய வற்றிற்கெல்லாம் கெடுதல் செய்யக் கூடிய பக்றீரியாக்கிருமிகள் நமது வாய்க்குள் இருக்கின்றன. ஆனால் அவை சாதாரண கண்களுக்குத் தெரியாது. ஒரு நாளுக்கு நமது வாயில் ஒருகலன் எச்சில் உற்பத்தி ஆகிறதாம். இது தொடர்ந்து பல்லைச் சுத்தப்படுத்திக் கொண்டேயிருக்கின்றது வலி பல்லில் இல்லையென்பதால் பல் நோய் இல்லையென்று நினைத்து விடாதீர்கள் என்கிறார் ஒரு டாக்டர்.

அதெல்லாம் இருக்கட்டும் பல்லைப் பாதுகாப்பதற்கு ஏதாவது வழியிருக்கிறதா என்று சொல்லுங்கள் என்று தானே கேட்கிறீர்கள். வழி இருக்கிறது என்று பல் வைத்திய நிபுணர்கள் சில குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். அதைச் சொல்லுகின்றேன் கேட்டுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு தடவை சாப்பிட்ட பிறகும் நன்றாகப் பல்லைத் துலக்க வேண்டும். பல்லுக்கு இடையில் உணவுப் பொருட்கள் தங்காமல் பார்த்துக் சொள்ள வேண்டும். வேளைக்கு ஒரு தடவை விளக்குங்கள் என்கிறார்கள். நம்மில் சிலர் ஒரு நளைக்கு ஒரு தடவை மறக்காமல் விளக்கினால் போதாதா?

ஃப்ளோரைடு உள்ள பற்பசையை உபயோகப் படுத்தினால் பல் எனாமல் உறுதியாகுமாம். அதனால் அமிலத் தாக்குதலில் இருந்து பல்லைப் பாதுகாக்கலாம் என்கிறார்கள். பல் சொத்தையாகி ஆழமான குழிகள் ஏற்டுகிற பொழுது ஆரம்பத்தில் வலி ஏற்படுவதில்லையென்பதால் அலட்சியமாய் இருந்து விடக்கூடாது. வைத்தியரிடம் போய்க் காட்ட வேண்டும். இனிப்பு அதிகமாகச் சாப்பிடாது குறைத்துக் கொள்ள வேண்டும். சாப்பிடும் நேரம் தவிர்ந்த இடை நேரங்களில் எதையாவது வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கக் கூடாது. இனிப்புப் பொருட்களைச் சாப்பிட்டால் உடனே பல்லை துலக்க வேண்டியது அவசியம்.

இவையெல்லாம் நம்மால் முடியாத காரியம்தான், கொஞ்சம் அக்கறை இருந்தால் போதும். இந்தக்காலத்திலே பலருக்கு வாய் நீளம் என்று சொல்கிறோமல்லவா? அதுபோல் அந்தக்கால மனிதனுக்கு பல் நீளம்.

ஒரு இலட்சம் வருஷங்களுக்கு முன் பிறந்தோர்களுக்கு பற்கள் நீளமாக இருந்ததாம். அப்போது இருந்த நீளத்தில் பாதி அளவுதான் இப்போது நமக்குஇருக்கிறதாம். ஆயிரம் வருடங்களுக்கு ஒருசத வீதம் என்ற அளவில் நீளம் குறைந்து கொண்டே போகிறதாம். இப்படியே போய் ஒருகாலத்தில் மனிதருக்குப் பல்லே இருக்காதென்று ஆராச்சியாளர்கள் சொல்கிறார்கள். பல்லில்லாத மனிதனைப்பார்க்கிறதற்கு இன்னும் ஒரு இலட்சம் வருடங்கள் ஆகலாம். இருந்தாலும் நாம் பல்லைக் கவனிக்கிற விதத்தைப்பார்த்தால் அந்தக் காலம்சீக்கிரமே வந்து விடும்போல் இருக்கிறது

'பல்லுப் போனால் சொல்லுப் போச்சு' என்பார்கள், அவ்வளவு தூரம் ஏன்? இப்போது ஒருவரிடம் போய்ப் பத்து ரூபா கைமாற்றுக் கேட்கிற தென்றால்கூடப் பல்லைக் காட்டவேண்டியிருக்கிறதே! ஒருவர் சிரித்தால் அதை முல்லைப்பூ சிரிப் பென்று வர்ணிக்கிறோமே! அது எதனால்? பல்லுப் பளிச்சென்று அழகாக இருக்கிற தென்பது தான் அர்த்தம். ஒருவர் சிரிக்கிறார்என்பதைத் தெளிவாக அடையாளம் காட்டுவதே பற்கள் தான்.

பல்லு இல்லையென்றால் அவர் சிரிக்கிறாரோ, அழுகிறாரோ என்று கண்டு பிடிப்பதே கஷ்டம் இதையெல்லாம் செய்முறையில் பார்த்து புரிந்து கொள்ளுங்கள்.

இதற்குமேலே சொல்லப் போனால் பலருடையகோபம் என்மேல் திரும்பும். அதன் பலன் என்னவாகும் தெரியுமா? அதன்பின்னர் நான் அழுகிறேனா? சிரிக்கிறேனா? என்று கண்டுபிடிப்பது உங்களுக்கு பெரிய கஷ்டமாய் விடும்.

சிலர்பல் உறுதியைக்காட்டுவதற்காகப் பெரிய காரில் கயிற்றைக் கட்டி அதைப் பல்லாலே கடித்து இழுத்துக் காட்டி சாதனை புரிவது உண்டு. அப்படி ஒருவர் சாதனை செய்தார் மறுநாள் அவரை இன்னொருவர் சந்தித்து 'என்ன ஐயா காரை கயிற்றால் கட்டி பல்லால் கடித்து இழுத்தீர்களாமே! வந்ததா? என்றார். வந்தது என்று இவர் பதில் சொன்னார். 'எது காரா வந்தது' என்று கேட்டார் அவர் இல்லை, பல்லுத்தான் வந்தது என்றார் இவர்.

-தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கியூடெக் நிறுவனத்தில் துணிகரத்திருட்டு
## இரவு வேளையில் சம்பவம்

(சுண்டுக்குளி)

யாழ்ப்பாணம் மத்.தியூஸ் வீதியில் செயற்பட்டு வரும் கியூடெக் நிறுவனத்தினுள் நேற்று முன்தினம் இரவு திடீரென உட்புகுந்த திருடர்கள் 4 ஆயிரம் ரூபா பணம், வானொலிப்பெட்டி, போன்ற பொருட்களை திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுக் கும்பல் யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தினுள் அன்றைய தினம் உட்புகுந்து அங்கிருந்த தொப்பியைக் களவாடிச்சென்றுள்ளனர்.

கிறிஸ்தோபர் அடிகள் நித்திரை செய்யும் அறைக்குள் உட்புகுந்தே மேற்படி தொப்பியைத் திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் குறித்து அப்பகுதி மக்கள் பலத்த விசனம் தெரிவித்துள்ளனர். (க-110)

## ஆலயங்கள் அமைச்சில் பதிவு

(மண்கும்பான்)

மண்கும்பான் வெள்ளைப் புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம், மற்றும்ஸ்ரீ சிவசாமி அம்பாள் ஆலயம் ஆகியவற்றினை இந்து கலாசார அலுவல்கள் அமைச்சில் பதியும் வகையில், வேண்டிய ஆவணங்கள் வேலணை பிரதேச சபைத்தலைவரூடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (உ-83)

## இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் சனசமூக நிலைய ஆண்டுப்பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 3 00 மணிக்கு மேற்படி நிலைய மண்டபத்தில் இடம்பெறும்.

யாழ் மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம், பதில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ப பரம்சோதி, நல்லூர் தெற்கு கிராமஅலுவலர் எம். கருணைநாதன் உட்பட பிரமுகர்கள் பலர் கலந்துகொள்வர். (க)

## ஜே. வி. பி. ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பொருட்களின் விலை உயர்விற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இனப்பிரச்சினை விடயத்தில் நோர்வே அரசுமேற்கொண்டு வரும் சமாதான முயற்சிக்கு கண்டனம் தெரிவித்தும் ஜே. வி. பி. யின் ஏற்பாட்டில் இரு இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. (ந-5)

## மானிப்பாயில் சிலை திறப்பு

[யாழ்ப்பாணம்]

சுவாமி ஞானப்பிரகாசரின் சிலை திறப்பு வைபவம் நாளை 22ஆம் திகதி மானிப்பாயில் உள்ள புனித அந்தோனியார் வளவில் இடம் பெற உள்ளது.

யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் மேற்படி சிலையை திரைநீக்கம் செய்து வைப்பார்.

இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் நினைவுத் திருப்பலி நடத்துவார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ் சிவலிங்கராசா சிறப்புரையாற்றவுள்ளார்.

அன்னாரின் 125 வது ஆண்டு பிறப்பு நிகழ்வையும், 54 வது அமரத்துவத் தினத்தைஒட்டியுமே இச்சிலை திறப்பு நிகழ்வு இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. (க)

## இன்று தையல் கண்காட்சி

வலி. தெற்கு பிரதேச செயலர் பிரிவில் தையல், மனையியல் பொருட்கண்காட்சியும், விற்பனையும் இன்று காலை 10.00 மணி முதல் தாவடி வடக்கு கிராமஅபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம், கௌரவ விருந்தினராகவடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் இ. இரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (க-104)

## வட்டுவில் பவளவிழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் பவள விழாச் சிறப்பு நிகழ்ச்சி கடந்த 19 ஆம் திகதி பிற்பகல் 2 30மணியளவில் மேற்படி பாடசாலை சிரேஷ்ட பிரிவு மண்டபத்தில் இடம் பெற்றது.

கல்லூரி அதிபர் வி. சிவஞானபோதன் தலைமையில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி ஆசிரியர் ஆறு. திருமுருகன் உட்பட பல பிரமுகர்களின் சொற்பொழிவுகள் இடம் பெற்றதுடன் அமரர் எம். எஸ்இராசரத்தினத்தின் உருவப்படம் திரை நீக்கம் உட்பட பல கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (க)

# சங்கே முழங்கு
## இடம்மாறும் தொலைபேசி

குருடர் ஒருவர் விளக்கைக் கையில் ஏந்திக் கொண்டு இரவில் நடந்து சென்றார். சிலர் அவரைப் பார்த்து ஏளனம் செய்தனர். விளக்கு எனக்கல்ல உங்களுக்கே என்று விழிகளை விழிக்கச் செய்தார் குருடர். சில திணைக்களத் தலைவர்கள் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி திணைக்களத்திற்குச் சொந்தமான தொலைபேசி, தொலை நகல் போன்றவற்றைத் தங்கள் சொந்த வீடுகளில் இணைத்துள்ளார்கள். இவை தங்கள் தேவைக்கு என்ப அவர்கள் நினைப்பு. மக்கள் அலுவலக நேரங்களில் அலுவலகத் தலைவர்களை, உத்தியோகத்தர்களை தொடர்பு கொள்ள முடியவில்லையென்ற குறைபாட்டை அவர்கள் விளங்குவதாக இல்லை. திணைக்களப் பணிப்பாளர், அமைச்சர்கள் கூட இவர்களை அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ள முடியவில்லை இந்த விடயத்தில் உரியவர்கள் உரிய முறையில் நடவடிக்கை எடுக்க மாட்டார்களா?

நெல்லியடி -ஜெயத்தான்.

### பொங்கல் கவிதைப் போட்டியில் பாராட்டுப்பெறும் கவிதைகள் பிரசுரமாகின்றன



## தைமகளே தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ

தைமகளே நின்வரவு நல்வரவு ஆருக
தாழாத கீர்த்தியொடு தடையின்றி நீவருக!
நெய்விளக்கேற்றிநாம் நிறைகுடம் வைத்துமே
நீளவே நினைந்துருகிப் பொங்கல் வைப்போம்
வையமோ பட்டதுயர் ஏராளம் நீ கண்டும்
வந்துநீ பார்ப்பதற்கு வருகிறாய் போலும்!
தொய்யாமல் முன்வாழ்ந்த வாழ்வுக்கு நாம் செல்லத்
தைமகளே தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ?

அளவையூர் சி. சிவஞானராசா

* * *

ஆண்டாண்டு காலமதால் ஆண்டு வந்த எமது இனம்
அனாதையாகி அலைகின்ற அவலநிலை வந்ததம்மா
ஊராண்டு நாடாண்டு உலகாண்ட எமது இனம்
ஊரிழந்து நாடிழந்து ஊறும் நிலை வந்ததம்மா
தமிழன் என்று கூறிக்கூறி தலைநிமிர்ந்து வாழ்ந்த
-இனம்
தலை தெறிக்க ஓடுதம்மா தன் தலை காப்பதற்கு
புதிதாகப் பூமிதனில் புலர்கின்றாய் தை மகளே
தவிக்கின்ற தமிழருக்கு விடிவுதனை தாருமம்மா

சுன்னாகம் அழகரத்தினம் பிரேமச்சந்திரா

* * *

வஞ்சிமகள் நீயும் இவ்வையகம்தனில்
வருடம் தோறும்வந்து பொங்குகின்றாய்-ஆனாலும்
வஞ்சங் கொண்ட போரதனை விரட்டியெமக்கோர்
விடிவுதர மறுக்கின்றாய் எம்
நெஞ்சமெலாம் விஞ்சி நிற்கும் ஏக்கமதை
நீக்கிவிட நீயோர் வழிவகுத்திடாயோ
விஞ்சுமெழில் தைமகளேயுனை கெஞ்சி நிற்கின்
றோம்
வைய கத்தில் தமிழரெமக்கோர் விடிவு தரமாட்
டாயோ

திருநெல்வேலி ரஞ்சினி வீரபாகு

* * *

எங்கள் தெருக்களிலே ஏற்றிவிட்ட தோரணத்தின்
பசுமை தொடர்கையிலே பறைகளும் இசைக்கிறது!
எங்கள் அன்னையரின் எழிலார்ந்த நெற்றிகளில்
குருதியிற் குழைத்தமண் குங்குமம் இடுகிறது!

அத்தானின் வரவுக்காய் அத்தைமகள் கொண்ட
ஏக்கம்
செத்தவர்கள் தொகைபெருகச் செம்மணியாய் முடி
கிறது!
தைத்தபல வடுக்களினால் தாளாது துயர் நீங்க
தைமகளே! தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ!

யாழ்ப்பாணம் சிவகாந்தன் நிசாந்

* * *

அத்தை மகளெல்லாம் ஆண்டுகள் பலவாய்
நத்தை வேகத்தில் நகர்ந்தே நெடுநாளாய்
பத்தை பறுகெல்லாம் பதுங்கிப் பலநாளாய்
எத்தை வந்தாலும் இடரே இடைநாளாய்

மந்தை கூடுள்ளே மக்கள் மனைவீடாய்
சிந்தை சிதறுண்டு சிக்சிச் சிலநாளாய்
இத்தை மகள்வந்து இயல்பின் மறுவீடாய்
புதுத்தை மகளே நீ புலர்வாய் தமிழர்க்காய்

அரியாலை பிரேமலதா மகேந்திரராசா

# பிலிப்பைன்ஸ் அதிபர் எஸ்ராடாவின் ஆட்சி விரைவில் முடிவுக்கு வரும்

## விமானம் தயாரான நிலையில்

(மணிலா)

பிலிப்பைன்சில் அதிபர் எஸ்ராடாவின் ஆட்சி முடிவடையும் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாகவும் இவர் எவ்வேளையிலும் நாட்டை விட்டு தப்பி ஓடலாம் என்றும் தலைநகர் மணிலாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதிபரை ஏற்றிச் செல்வதற்காக விமானம் ஒன்று தயார் நிலையில் உள்ளதாகவும் மேலும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தையடுத்து பிலிப்பைன்சில் தேர்தலை நடத்த அதிபர் உடன்பட்டதாகவும் மேலும் அறியப்படுகிறது.

தான் தேர்தலில் பங்கு கொள்ளவில்லையென்று எஸ்ராடா அறிவித்தபோதும் எதிர்க்கட்சியினரும் உப ஜனாதிபதியும் மறுத்ததுடன் இது அரசியல் சட்டத்துக்கு மாறானதென்றும் பதவியிலிருந்து அதிபரும் உப அதிபரும் விலகினால்தான் தேர்தல் நடத்த முடியுமென்றும் உடனடியாக பதவியை விலகும் படியும் எதிர்க்கட்சியினர் கேட்டுக் கொண்டனர்.

இதற்கு ஏஸ்ராடா மறுத்து விட்டார். இதேவேளை, எஸ்ராடாவின் பதவி நாட்கள் மணித்தியாலங்களாக எண்ணப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் பத்திரிகை செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை, எஸ்ராடாவின் அமைச்சரவையில் உள்ள பாதுகாப்பு அமைச்சர் பெர்ணாண்டோவும் ஆயுதப்படையின் தலைவரும் எதிர்கட்சியிரை ஆதரிக்கின்றனர்.

இதற்கிடையில் ஆகாயப் படையும் பொலிஸ்படையும் எதிரணியினருக்கு ஆதரவு கொடுப்பதாகவும் இராணுவம் எஸ்ராடாவிற்கு உதவி கொடுப்பதை நிறுத்தியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

உப ஜனாதிபதிக்கு செல்வாக்கு கூடிவருகின்ற இந்த நிலையில் அதிபர் யாரும் துணையற்றவராக வெளிநாடு ஒன்றிற்கு தப்பி ஓடும் நிலை ஏற்பட்டிருப்பது வருத்தத்திற்குரியது என சர்வதேச அரசியல் வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(து)

# விளையாட்டு அரங்கு

## கிரிக்கெட் போட்டி

பங்களா தேஷ் கிரிக்கெட் அணி வரும் ஏப்பரல் மாதம் சிம்பாவேக்கு சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது இந்த அணி அங்கு இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் மூன்று ஒருநாள் போட்டியிலும் கலந்து கொள்ளும்.

★ ★ ★

## முரளியின் 300 ஓட்டங்கள்

நடந்து முடிந்த தென்னா பிரிக்கா உடனானடெஸ்ட் போட்டிகளுடன் இலங்கையின் சுழல் பந்து வீச்சாளர் முரளிதரன் 300 ஆவது விக்கெட்டினை வீழ்த்தியதன் மூலம் கிரிக்கெட் உலகில் 300 விக்கெட்டுகளை வீழ்த்திய 17ஆவது வீரராக தடம் பதித்துள்ளார். இலங்கை அணியை பொறுத்தவரை இவரைத்தவிர 150 ஆவது விக்கெட்டை கூட எவரும் வீழ்த்த வில்லை ஆனால் முரளியின் இலக்கோ 500 விக்கெட்டுகளை வீழ்த்தும் சாதனை நோக்கியே இருக்கிறது.

★ ★ ★

## பிறயன்லாராவின் வீழ்ச்சி

உலக டெஸ்ட் வரலாற்றில் ஆகக் கூடிய ஓட்டங்களான 375 ஓட்டங்களை பெற்று பல சாதனைகள் நிகழ்த்திய மேற்கிந்திய அணித்தலைவர் பிறயன் லாராவின் கடந்த மூன்றாண்டு சரிவானது அவரின் கிரிக்கெட் ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தி உள்ளது.

# நாடு முழுவதும் சேமிப்புக்கிடங்குகள் பிரதமர் வாஜ்பாயின் புதிய திட்டம்

(பெங்களூர்)

விவசாய விளைபொருட்களை நல்லவிலையுடன் விற்கும் நோக்குடன் நாடெங்கிலும் சேமிப்புக் கிடங்குகளை அமைக்கும் திடத்தை மத்திய அரசு ஆரம்பிக்க இருப்பதாக பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார்.



பெங்களூரில் நடந்த நிகழ்ச்சியொன்றில் உரையாற்றுகையில் பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில்; விவசாயம் போன்ற துறைகளில் தனியார்களும் ஸ்தாபனங்களும் முதலீடு செய்ய முன் வரவேண்டும் என்றும் அப்படி முதலீடு செய்பவர்களுக்கு சலுகைகளும் உதவிகளும்செய்வதற்கு மத்தியஅரசு முன்வந்துள்ளதாகவும் பிரதமர்குறிப்பிட்டார்.

விவசாயஉற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களைச் சேமித்து வைத்து நட்டம் ஏற்படாது நல்ல விலைக்கு விற்பதற்கு சேமிப்புக் கிடங்குகள் கிராமங்கள் தோறும் தேவையென்றும் அதனை அரசு அமைக்க முனைந்து வருகிறதென்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்; முன்பு நாட்டில் உற்பத்தி மிகக் குறைவாக இருந்ததென்றும் இப்பொழுது நாடு உற்பத்தியில் குறிப்பாக விவசாய உற்பத்தியில் தன்னிறைவு கண்டு விட்டதென்றும் குறிப்பிட்டார்.

நாட்டிலே விவசாயம் தடையின்றி தடை பெறுவதற்கு நீர் வளம் மிக அவசியம என்பதனை உணர்ந்ததால் அது தடையின்றிக் கிடைப்பதற்கு அரசுநல்லநீர்ப்பாசனத்திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருவதாகவும் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார். (து)

# பிலிப்பைன்ஸ்

## புதிய அதிபராக அறோஜா நீதிபதி முன் பதவியேற்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் எதிர்க்கட்சித்தலைவரும் துணை அதிபருமாகிய செல்வி குளோரியா அறோஜா அந்நாட்டின் புதிய அதிபராகப் பதவி ஏற்றுள்ளார்.

தலைநகர் அறோஜாவில் நேற்றுக் காலை புதிய அதிபராகப் பதவியேற்றார் (து

## புதிய இசைவடிவம் பெறும் தேசிய கீதம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரின் தேசிய கீதம் புதிய இசை வடிவத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

தகவல் ஒலிபரப்பு அமைச்சு பல இசையாளர்களைக் கொண்டு உருவாக்கிய புதிய நாட்டுப் பண் இசையை வெளியிட்டது

இது எல்லோரும் இலகுவில் பின்பற்றக் கூடிய சுவை நிறைந்த இசைவடிவம் என்று நாட்டின் சகல நிகழ்வுகளிலும இதனை இசைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## புஷ் நேற்று பதவியேற்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் நாற்பத்தி மூன்றாவது ஜனாதிபதியாக ஜோர்ச் டபிள்யூ புஷ் நேற்று பதவி யேற்றார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில்சரித்திரம்படைத்ததாகவும் பல சிக்கல்களும் வழக்குகளும் நிறைந்ததாகவும் இந்த ஜனாதிபதித் தேர்தல் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (து)

# மதுரையில் ரயில் மோதி 47 பசுக்கள் பலி

(மதுரை)

மதுரைக்கு அருகே ரயில் மோதி நாற்பத்தியேழு பசுக்கள் இறந்துள்ளன.

நேற்று முன்தினம் திருமங்கலம் ரயில் நிலையத்திற்கும் கள்ளிக்குடி ரயில் நிலையத்திற்கும் இடையில் இந்தச் சம்பவம் நடந்தது.

சரக்கு ரயில் ஒன்று வேகமாக வந்து கொண்டிருந்த பொழுது மேச்சல் மாடுகள் குறுக்கே பாய்ந்தோடத் தொடங்கியதில் ஏற்பட்ட மோதலில் மேற்படி தொகை பசுக்கள் இறந்தன.

பிற்பகல் நடந்த சம்பவத்தின் பலனாக நெடுந்தூர பயணிகள் ரயில்கள் தாமதமாக வரநேர்ந்தது. (து)

# தமிழக ஆளுநர் பாத்திமா உரையில் உண்மைக்குப் புறம்பான தகவல்கள்

## சாடுகிறார் செல்வி ஜெயலலிதா

(சென்னை)

தமிழக சட்டசபை கூட்டுக் கூட்டத்தில் ஆளுநர் செல்வி பாத்திமாபீபி ஆற்றிய உரையில் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் இருப்பதாக செல்வி ஜெயலலிதா குற்றஞ் சாட்டினார்.

அண்ணா திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா தான் விடுத்துள்ள அறிக்கையில்; தென் மாநிலங்களில் இனக் கலவரங்களில் பாதுகாப்புப் படையினர் நல்லமுறையில் நடந்துநீதிகாக்கமுற்பட்டார்களென்றும் பொலிஸ் பாதுகாப்பு நவீனமயப்படுத்தப் பட்டுள்ளனதென்றும் உண்மைக்குப் புறம்பாக ஆளுநர் உரையில் குறிப்பிட்டதை மறுத்துரைத்தார்.

மேலும் அந்த அறிக்கையில்; மக்களுடைய அன்றாட நுகர்வுப் பொருட்களின் விலையேற்றத்தைக் குறைக்க அரசு தவறிவிட்டது என்று செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (து)

# மொறிஷீயஸ் பிரதமர் தமிழகம் விஜயம்

(சென்னை)

மொறிஷீயஸ் பிரதமர் இரண்டு நாள் பயணமாக சென்னை வந்து சேர்ந்தார்.

பிரதமர்அநுருத் ஜெகநாத்தை விமான நிலையத்தில் தமிழக ஆளுநர் பாத்திமாபீவி துரைமுருகன், அரசுச் செயலர் முத்துசாமி ஆகியோர் வரவேற்றனர்.

மொறிஷீயஸ் பிரதமர் ஜெகநாத் கடல் பூங்கா தேசிய கடல்வள நிலையம் ஆகியவற்றைப் பார்வையிடவுள்ளார்.

சென்னை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் இவர் கலந்து கொள்ளவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(து)

## இராணுவ உடன்படிக்கை

(வாஷிங்டன்)

அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து இராணுவ உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட உள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவுடன் இணைந்து நவீன யுத்த விமானம் ஒன்றை உருவாக்கவே இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. பிரிட்டன் இதற்காக 2 மில்லியன் டொலரை வழங்கும் எனவும் தெரிய வருகிறது. (தி)

# சுட்டுக் கொல்லப்பட்ட கொங்கோ அதிபரின் சடலத்தை மீட்க மனைவி, பிள்ளைகள் விரைவு

(கொங்கோ)

சுட்டுக்கொல்லப்பட்ட கொங்கோ அதிபர் லோறென்ஸ் கபிலாவின் உடலை பெறுவதற்காக அவரின் மனைவி மற்றும் மக்கள் சிம்பாவே நாட்டின் தலைநகர் ஹராரேக்குச் சென்றடைந்தனர்.

இன்றுலோறென்ஸ் கபிலாவின் உடல் ஹராரே நகரிலிருந்து எடுத்துச்செல்ல இருப்பதாகவும் அதற்குமுன் கராரேநகரில் கபிலாவின் உடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும் என்று சிம்பாபே நாபட் முஹாபேயின் அதிகாரிஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, கொங்கோ நாட்டில் முன்று நாட்களுக்கு துக்கம் அனுஷ்டிக்கும் ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் கபிலாவின்உடல் கொங்கோ வந்ததும் மக்களின் அஞ்சலிக்கு வைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் கொங்கோவின் கிளர்ச்சிக்குழு ஒன்று சில பகுதிகளை தன் வசமாக்கியிருப்பதாகவும் அமைதியைப் பேணும் வகையில் ஜோசேப் கபிலா சமரசப்பேச்சுகளில் ஈடுபட்டிருப்பதாகவும் படையினர் உஷார் நிலையில் கண்காணிப்பில் ஈடுபட்டிருப்பதாகவும் கொங்கோச் செய்திகள் தெரிவித்துள்ளன.

சிலதினங்களிற்கு முன்னர் கொங்கோ அதிபர்ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே. (து)

[stamp]

அறிவுடையார் ஆவதறிவார் அறிவிலார்
அஃதறி கல்லாதவர்
... குறள்

# வலம்புரி

## நியாயமான கோரிக்கை

யாழ்ப்பாணத்திலுள்ள நாற்பத்தேழு மனிதநேய அமைப்புக்களை உள்ளடக்கிய மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு நேற்றுமுன்தினம் நோர்வேத் தூதுவர் எரிக்சோல் ஹெய்முக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அக் கடிதத்தில் இருநியாயபூர்வமான கோரிக்கைகள் அவரிடம் விடுக்கப் பட்டுள்ளது.

அதில் ஒன்று எரிக்சோல் ஹெய்ம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ய வேண்டும். மற்றையது புலிகளின் யுத்த நிறுத்தத்திற்கு அமைவாக அரசுபயுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள உதவ வேண்டும். இவ்விரு கோரிக்கைகளும் நியாய பூர்வமானவை என்பதுடன் இவற்றைச் செய்வதன் மூலம் இனப்பிரச்சினை ஈன்றளித்த பாதகத்தையும், போரின் அகோரத்தையும் தடுக்க முடியுப் என்பது சர்வ உண்மை.

இனப்பிரச்சினையின் தீர்வில் ஈடுபடும் எரிக்சோல் ஹெய்ம் யாழ்ப்பாணத்திற்கு, அதிலும்தென்மராட்சிக்கு வருகை தந்தால் யுத்தத்தின் தாக்கம் .. தமிழ் மக்களை எந்தளவு தூரம் பாதித்துள்ளதென்பதை இலகுவாக - எவரது விளக்க வியாக்கியானமுமின்றி உணர்ந்து கொள்ள முடியும். இடம் பெயர்ந்த முகாம்கள், வருடக்கணக்கில் இறங்கி ஏறி உடல் உள ரீதியில் அலுத்துப் போன மக்கள், உடைந்த வீடுகள், அவயம் இழந்தோர் என ஏகப்பட்டோரை சந்திக்க முடியும்.

ஆனால் பொதுவாக வெளிநாட்டுத் தூதுவர்கள், பிரதிநிதிகள் இலங்கைக்கு வரும் போது கொழும்பு மாநகருடன் தமது பயணங்களை நிறுத்தி விடுகின்றனர் ஏதோ இலங்கையென்றால் கொழும்பு என்ற நினைப்பில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இருப்பதாலேயே தமிழ் மக்களின் அவல நிலைகளை அவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை.

எனவே இதுவரை காலமும் உலகப் பிரதிநிதி விட்ட தவறை நோர்வேயின் தூதுவர் எரிக்சோல் ஹெய்மும் விடாமல்இருப்பதற்கு நிச்சயம் அவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதும், யாழ்ப்பாணத்து மக்களின் உணர்வலைகளை நேரில் அறிந்து கொள்வதும் மிக மிக அவசியமாகும்.

### பரமபிதா காட்டிய பாதை

# இயேசுவின் வழியில் தூய ஆவியின் துணையுடன் சட்டளையிடப்பட்ட பணிகளை ஆற்றுவோம்



மூன்றாம் மிலேனியத்துள் நுழைந்திருக்கும் இந்நாட்களில் திருமுழுக்குப் பெற்ற அனைவரும் மீட்புப் பணி செய்ய அழைக்கப்பட்டுள்ளோம். தந்தையாம் இறைவன் தனது மைந்தன் இயேசுவின் வழியாக பரிசுத்த ஆவியின் வல்லமையைத் துணையாகக் கொண்டு நம் ஒவ்வொருவரையும் திருமுழுக்கின்வழியாக பணிவாழ்விற்கு அழைக்கின்றார்.

இறைவனின் மீட்புப் பணி எத்தகையது என்பதையும் அவை எவ்வாறு தூய ஆவியின் தூண்டுதலால் முன்னெடுக்கபபடுகின்றது. என்பதையும் பரிசுத்த வேதாகமத்திலே பல இடங்களில் பவுலடிகள் மிக அழகாக எடுத்தியம்புகிறார்.

**கிறிஸ்தவர் கடமை**

ஒவ்வொருவருக்கும் இடப்பட்ட மீட்புப் பணியின் வடிவங்கள் வெவ்வேறானவை. ஆனால் அவை அனைத்துமே இறைவனின் மீட்புப் பாதைக்குப் படிக்கற்களாக அமைந்துள்ளன. எம்ஒவ்வொருவருக்கும் இடப்பட்ட பணியைத் தெரிந்து கொண்டு தூய ஆவியின் வல்லமையால் அதைத் திறம்படச் செய்வதே கிறிஸ்தவர்களாகிய எம் ஒவ்வொருவரினதும் கடமையும் கடனும் ஆகும்.

**திருச்சபையும் பணிகளும்**

புனிதபவுலடிகளார் மீட்புப் பணியின் பரிமாணங்களையும் அவை எவ்வாறு ஒரே திருச்சபையின் கீழ் மீட்புப்

## செல்வி நிர்மலா நவரட்ணம்
(யாழ். பல்கலைக்கழகம்)

பணி பரிசுத்த ஆவியின் ஆற்றலால் நடைபெறுகின்றது என்பதையும் மிக அழகாகக் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்திலே வெளிப்படுத்துகிறார். திருச்சபையையும், அதன் பணிகளையும் மிக அழகாக உடலுக்கும் உடலுறுப்புகளுக்கும் ஒப்பிடுகின்றார்.

கிறிஸ்தவர்களாகிய எம் அனைவருக்கும் கொடுக்கப்பட்ட பணி எத்தகையது என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும் அதற்குத் தேவையானது பரிசுத்த ஆவியின் வல்லமையே.

இயேசுவும் தனது பணிவாழ்விற்கு திருமுழுக்கின் பின்முழுமூச்சாக ஈடுபட்டதையும் அவரின் பணிவாழ்வு எத்தகையது என்பதை எசாயா இறைவாக்கினர் கூறுவதையும் லூக்கா நற்செய்தியில் காணலாம்.

**பணி வாழ்வு**

இயேசுவின் பணி வாழ்வின் தொடக்கம் ''இயேசு தூய ஆவியின் வல்லமை உடையவராய் கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார்'' (லூக் 4:14) என்று சொல்லப்படுகின்றது.

தனது முதற்பணியாக நற்செய்தி அறிவிப்புப் பணியையும் தொடர்ந்து குணமாக்கலையும் விடுதலையையும் கூறுகின்றார்.

இயேசு தனது மீட்புப் பணியின் இறுதி நாட்களில் தனது உயிர்ப்பின் பின் இறுதியாகத் தனது சீடர்களுக்கு - திருத்தொண்டர்களுக்குக் கொடுத்த அன்புக் கட்டளையை நாம் எடுத்து நோக்கினால் எம் ஒவ்வொருவருக்கும் இடப்பட்ட பணி எத்தகையதுஎன்பது வெளிப்படை.

''நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை மகன் தூய ஆவியின் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன் என்றார்'' (மத் 28:19-20) இது திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனினதும் தலையாய பணி. திருச்சபை இவ்வுலகில் இருப்பது நற்செய்தியை அறிவிக்கவே.

இது இன்று தூய ஆவியானவர் நமக்கு விடுக்கும மிகப் பெரிய சவால். இன்று இப் பணி இன்னும் தொடக்க நிலையிலேயே உள்ளது. இப் பணியைச் செய்ய நம்மை உந்துபவர் தூய ஆவியாரே.

**நற் செய்தி**

நான் நற்செய்தியைப் போதித்தால் அதிலே பெருமைப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் இதைச் செய்ய வேண்டிய கட்டாயம் எனக்கு உள்ளது. நற்செய்தியை அறிவிக்காவிட்டால் ஐயோ எனக்குக் கேடு'' (1 கொரி 9:16) என்று கூறுகிறார் பவுலடிகளார்.

எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் நமக்கு இடப்பட்ட பணியை தூய ஆவியின் வல்லமையால் அறிந்து கொண்டு அவரின் துணையுடன் திறம்பட ஆற்ற தூய ஆவியின் துணையை வேண்டிச் செபிபபோம்.

### சோதிடபலன்

# மனிதனின் குண இயல்புகளை அப்பட்டமாக வெளிக்கொணரும் எண் சோதிடக்கலை

## பேராசிரியர் என். சாமி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**பிறந்த எண் 3 - விதி எண் 1**

இவர்கள் உத்தியோகம் பார்ப்பவர்கள், கூடவே ஒரு உபதொழிலும் புரிந்து வருவார்கள். இவர்கள்உலோகம், கல், மரம் போன்ற தொழில்களின் மூலம் பணம் ஈட்டுவார்கள அல்லது இந்தத் தொழில் சம்பந்தமான இடங்களில் வேலைக்கு அமர்ந்து சிறந்த பொருள் ஈட்டலாம.

**பிறந்த எண் 3 - விதி எண் 2**

இவர்கள் ஒப்பந்த வேலைகள், கமிஷன், அழகுசாதனம், நூல்கள், போன்ற தொழில்களில் பிரமாதமாக விளங்குவார்கள். அல்லது அத்தகைய தொழில்கள் சம்பந்தப்பட்ட இடங்களில் உத்தியோகத்திற்கு அமர்ந்து பொருள் ஈட்டலாம்.

**பிறந்த எண் 3 - விதி எண் 3**

இவர்கள் பால்ப் பண்ணை வைத்து நடத்தினால் மிகுந்தசெல்வம் கொழிக்கும். மற்றும் பல சரக்கு மொத்த வியாபாரம், ஒப்பந்தவேலைகளிலும் முன்னேறலாம். அல்லது இந்தத் தொழில் சம்பந்தப்பட்ட இடங்களில் உத்தியோகத்திற்கு அமர்ந்து நல்ல பொருள் ஈட்டலாம்.

**பிறந்த எண் 3 - விதி எண் 4**

இவர்கள் பேச்சாலும் எழுத்தாலும் பொருள் ஈட்டலாம். வாகனத் தொழிலும் இவர்களுக்குப் பொருந்தும். இவர்கள் பேரம் பேசுவதில் பொரும் நிபுணர்கள். அல்லது இந்தத் தொழில் சம்பந்தப்பட்ட இடத்தில் உத்தியோகத்தில் அமர்ந்து திரண்ட செல்வத்தைச் சமபாதிக்கலாம்.

**பிறந்த எண் 3 - விதி எண் 5**

இவர்கள பிறரை மகிழ்விக்கும கலைத் தொழிலில் முன்னேறலாம. மற்றும் கல், உலோகம் சம்பந்தமான தொழிலும் இவர்களுக்குப் பொருந்தும். அல்லது இந்தத் தொழில் சம்பந்தப்பட்ட இடங்களில் உத்தியோகத்திலமர்ந்து திரண்ட செல்வத்தைப் பெறலாம்.

**பிறந்த எண் 3 - விதி எண் 6**

இவர்கள் ஆடம்பரப் பொருள்களின் வியாபாரம் செய்து பெரிய பணக்காரராக ஆகலாம். மற்றும் ஜவுளித் தொழிற்சாலை, கமிஷன் தொழிலாலும் இவர்கள் மேன்மை அடையலாம். அல்லது இந்தத் தொழில் நடக்கும் இடங்களில் உத்தியோகத்தில் அமர்ந்து பொருளீட்டலாம்.

**பிறந்த எண் 3 - விதி எண் 7**

இவர்கள் மருந்து வியாபாரம் கலை, சம்பந்தமான தொழிலில் ஈடுபட்டுப் பெரும் பணம் சம்பாதிக்கலாம். கல் வியாபாரம் கூட இவர்களுக்குப் பொருந்தும். அல்லது இது சம்பந்தமான தொழிற்கூடங்களில் பணிக்கு அமர்ந்து செல்வம் திரட்டலாம்.

**பிறந்த எண் 3 -விதிஎண்8**

இவர்கள் இரும்புத் தொழில், இன்சினியரிங், மோட்டார்வாகனம் போன்றவற்றில் ஈடுபட்டால், நல்ல இலாபம் கிடைக்கும். சிலர் எழுத்துத் தொழிலும், உலோகம் சம்பந்தமான தொழிலும் முன்னேறுவர். அல்லது இந்தத் தொழில் சம்பந்தப்பட்ட இடங்களில் வேலைக்கமர்ந்து மேன்மையடையலாம்.

**பிறந்தஎண் 3 -விதிஎண்9**

இவர்களுக்கு கட்டடம் கட்டும் ஒப்பந்தத் தொழில் மிகவும் பொருந்தும். பலரை வைத்து வேலை வாங்கும் எந்தத் தொழிலும் இவர்களுக்குப் பொருந்தும். அல்லது இந்தத் தொழில் சம்பந்தப்பட்ட இடங்களில இவர்கள் வேலைக்கமர்ந்து நல்ல சம்பளம் பெறலாம்.

**பிறந்த எண் 4 -விதிஎண்1**

இவர்கள பேச்சாலும், எழுத்தாலும் நிறையப் பொருள் சேர்ப்பர், மற்றும் இரும்பு, கமிஷன் ஏஜென்ட், வாகனம் போன்ற தொழில்களிலும் இவர்கள் முன்னேறலாம். அல்லது இத்தொழில் சம்பந்தமான இடத்தில் உத்தியோகம் பார்த்து திரண்ட செல்வத்தைச் சேமிக்கலாம்.

**பிறந்த எண் 4 -விதிஎண்2**

இவர்கள் ஆடம்பரப் பொருள்கள், இரும்பு சம்பந்தப்பட்ட தொழிலில் முன்னேறலாம். பொருட்கள் ஏற்றுமதி, இறக்குமதி தொழிலும் இவர்களுக்குப் பொருந்தும் அல்லது இது சம்பந்தப்பட்ட இடங்களில் இவர்கள் வேலைக்கு அமர்ந்தும் மேன்மையுறலாம்.

**பிறந்தஎண் 4 -விதிஎண்3**

இவர்கள் மருந்து சம்பந்தமான வியாபாரத்தில் முன்னேறலாம். மற்றும் சாப்பாட்டுப் பொருள், இரும்பு, வாகனம் போன்ற தொழில் மூலமாகவும் இவர்கள் நிறையச் சம்பாதிக்கலாம். அல்லது இவை சம்பந்தமான தொழிற்சாலையில் இவர்கள் பணி புரிந்து செல்வம் திரட்டலாம்.

**பிறந்தஎண் 4 -விதிஎண் 4**

இவர்கள எழுத்தாலும், பேச்சாலும் பொருள் திரட்டுவார்கள். மற்றும் கல், இரும்பு, வாகனத் தொழிலும் இவர்களுக்குப் பொருந்தும், அல்லது இந்த இடங்களில் உத்தியோகம் பார்த்தும் செல்வம் திரட்டலாம்.

**பிறந்தஎண் 4 -விதிஎண் 5**

இவர்களுக்கு போக்குவரத்துத் தொழில் மிகவும் பொருந்தும், அல்லது ஏஜென்சீஸ் தொழிலும் ஈடுபட

(2-ம் பக்கம் பார்க்க)

# எத்தனை கோடிரூபா செலவானாலும்
# படையினர் ஆனையிறவை கைப்பற்றுவர்

## பிரதமர் ரட்ணசிறி சூளுரை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்திற்கு ஒரு நாளைக்கு இரண்டரைக் கோடி ரூபா செலவாகிறது. எனினும் இராணுவத்தினர் விரைவில் ஆனையிறவைக் கைப்பற்றி விடுவர் இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளனர்.

விஷேட அதிரடிப்படைக்கு ஆட்களை சேர்க்கும் நடவடிக்கை நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து அடுத்த மாதம் 9ம் திகதி வரை மாவட்டங்கள் தோறும் இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை நடைபெறவுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கு சிங்களப் பத்திரிகைகளிலும் தொலைக் காட்சிகளிலும் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களை மீண்டும் இராணுவத்தில் சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (வ)

## கண் காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரனையுடன் வலி தெற்கு பிரதேச செயலர் பிரிவினால் நடாத்தப்படும் தையல், மனையியல் கைப்பணி பொருட் காட்சியும் விற்பனையும் இன்று காலை 9.30 மணிக்கு தாவடி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

## சனிக்கிழமை முதல் 'சிற்றி ஒவ் றிங்கோ' சேவை

(கொழும்பு)

திருமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபட்டிருக்கும் ''சிற்றி ஒவ் றிங்கோ'' கப்பல் அடுத்த சனிக்கிழமை முதல் பயணிகள் சேவையில் ஈடுபடவுள்ளதாக கப்பல் கம்பனி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக் கப்பலில் பிரயாணம் செய்யவுள்ள பயணிகளுக்கு கொழும்பிலும் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டு பயணச் சீட்டுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதே வேளை திருமலையில் வைத்தும் வழமை போல் பயணச் சீட்டு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வி)

## கடந்த வருடத்தில் மட்டும் 479 சடலங்கள் ஒப்படைப்பு

### சர்வதேச . செ . ச . பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்திற்கும்தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே கடந்த வருடத்தில் மாத்திரம்சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தினரால்479சடலங்கள் பரிமாற்றப்பட்டுள்ளதாக சங்கத்தின்பேச்சாளர் ஹர்ஷா குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயேமேற்படிதகவல்வெளியிடப்பட்டது.

சடலங்கள் கையளிப்பு தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் ஒப்படைக்கப் பட்டசடலங்களில்270சடலங்கள் புலிகளுடையவைஎனவும் 209சடலங்கள் இராணுவத்தினருடையது எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்தவருடத்தில் மேற்கொள்ளப்பட்டகப்பல் போக்குவரத்து மூலம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூவாயிரத்து 707 பிரயாணிகளை ஏற்றிஇறக்கியுள்ளதெனவும் இவர்களில் ஆயிரத்து 618பேர் வைத்தியசேவைக்காகபிரயாணத்தைமேற்கொண்டிருந்தார்களெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ

## கறுப்புப் பட்டி வழங்கிய பல்கலை மாணவர் கைது

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு சுதந்திர மாணவர் அமைப்பு அழைப்பு விடுத்திருந்த ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து யாழ் மத்திய பஸ் நிலையத்தில் கறுப்பு பட்டிகளை விநியோகம் செய்வதில் ஈடுபட்டிருந்த பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று இராணுவத்தால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களைக் கைது செய்த இராணுவத்தினர் இவர்களிடம் இருந்த கறுப்புப்பட்டி மற்று குண்டூசி, அடையாள அட்டை ஆகியவற்றையும்பறிமுதல் செய்து விசாரணைக்கு ஆரியகுளம் இராணுவ முகாமிற்குஅழைத்துச்சென்றனர்.

அங்கு ஒரு மணித்தியாலமாக விசாரணை செய்யப்பட்ட பின் அடையாள அட்டைகளைக் கொடுத்து விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது:

இச்சம்பவம் நேற்றுக் காலை 11 மணிக்கு யாழ் மத்திய பஸ் நிலையத்தில் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-43)

## இனப்பிரச்சனைக்கானதீர்வுவழியை அரசியல் வாதிகளே தீர்மானிப்பர்!

### சபாநாயகர் அனுரா கருத்து

(கொழும்பு)

இலங்கையில் நீண்டகாலமாக நிலவி வரும் இனப்பிரச்சினையை யுத்தத்தின் மூலம் தீர்க்கலாமென்று ஒரு கருத்தும், தமிழ் பேசும் மக்களுடைய அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையில் பேச்சுவார்த்தை மூலம்தீர்க்கலாமென்று மற்றொரு கருத்தும் நிலவி வருகிறது. இவ் இரு கருத்துக்களிலும் எக் கருத்தின் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்கலாமென்பதை அரசியல் வாதிகளான நாமே முடிவு செய்யவேண்டியுள்ளது. இவ்வாறு சபாநாயகர் அனுரா பண்டார நாயக்கா மார்க்கா நிறுவனம் நடத்திய கருத்தரங்கொன்றில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

தொழில் சார் அரசியல் ரீதியான கருத்தரங்கொன்று மார்க்கா நிறுவனத்தினால் கொழும்பில் நேற்று நடத்தப்பட்டது.

இக் கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சபாநாயகர் அனுரா பண்டார நாயக்கா மேலும் தெரிவிக்கையில்;

தற்போது அரசாங்கம் புலிகளுக்கெதிரான போரை நடத்தி வரும் அதே நேரம் வறுமைக்கு எதிராகவும், போராட்டம் நடத்தவேண்டியுள்ளது:

எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வினை எந்த வழி மூலம் மேற்கொள்ளலாம் என்பதற்கான ஆலோசனைகளை இக் கருத்தரங்கில் கலந்துகொண்டோரை வழங்குமாறும் சபாநாயகர் கேட்டுக் கொண்டார்.

இக் கருத்தரங்கில் பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டார்கள். (வ(

## பல.நோ.கூ.சங்க செய்திக்கு தவராஜா எம்.பி மறுப்பு

(கொழும்பு)

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்க நிர்வாகத்தை மாற்றுமாறு வடக்குக்கிழக்கு மாகாண ஆளுநரிடம் தான் கோரவில்லை என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர். எஸ் தவராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மீதும் கண்காணிப்புதேவையென்றே தாம் தெரிவித்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

இதனை பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான வி. கே. ஜெகனும் நேற்று வலம்புரியுடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தினார். (ந)

---

**எரிக்சோல்...**

நிறுத்தம் தொடர்பான நிலைப்பாட்டினை ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் எடுத்துக் கூறவுள்ளார்.

இதேவேளை விடுதலைப்புலிகளின் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்பு 24ஆம் திகதி முடிவடையவுள்ளதால் ஜனாதிபதி சந்திரிகா யுத்தநிறுத்த அறிவிப்பொன்றை வெளியிடுவாரென கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாக செய்திகள் அடிபடுகின்றன.

இது இவ்வாறிருக்க கொழும்புவரும் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் யாழ்ப்பாணம் வருமாறு 47 மனிதநேய நிறுவனங்கள் கூட்டாகக் கோரிக்கைவிடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (வ)

---

**லக்ஷ்மன். . . .**

போகாமலும் தாங்கள் வெளியிட்ட அறிக்கைகள் மற்றும் தங்களது நாட்டு நலன் சார்ந்த கருத்துக்கள் எமக்கு பெரும் உற்சாகத்தையும் பூரிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இராணுவ நடவடிக்கை மூலம் புலிகளை தோற்கடிக்கும் தீர்வுக்கு தாங்களும் அரசும் முழு ஆதரவுடன் செயற்படுவீர்கள் என நம்புவதாகவும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ

---

**உதயன்.-.**

டர்பு கொண்டு பேட்டி கண்டமை தொடர்பாகவே, இவ் விசாரணைகள்இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உதயன் பத்திரிகைக் காரியாலயத்தில் சுமார் இரண்டு மணிநேரம் இவ்விசாரணை இடம்பெற்றது. (இ)

---

**வன்னியில்...**

யைக் கொள்வனவு செய்து வழங்குவதற்கு அத்தியாவசிய சேவைகள் நாயகம் அனுமதி தரவேண்டும் எனக் கோரியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகிறது அத்துடன் ஆளணி பற்றாக்குறையும் உள்ளது.

இதேவேளை பாடசாலைகளிலும்போதியளவுஆசிரியர், கட்டிட வசதிகள் இல்லாததினால் கொட்டில்களை அமைத்து பாடசாலைகளை நடத்த வேண்டியிருப்பதாகவும் இப் பாடசாலைகளில் 700 ஆசிரியர்களுக்கு வெற்றிடம் நிலவுவதாகவும் அரச அதிபர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். (வ)

---

**விறகு. . . .**

கருதப்படுவோரின் உறவினர்கள் தேடிச் சென்றிருந்த போது காட்டுப் பகுதியில் சைக்கிள்கள்மாத்திரம்காணப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட இராணுவ விஷேட அதிரடிப் படை மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளின் கவனத்திற்கு மௌலானா எம்.பி. கொண்டுவந்துள்ளார். (வ)


**ஸ்ரீசெல்வா**

(யாழ்ப்பாணம்)

விஜயகாந்த், நாசர், பிரகாஷ்ராஜ், ரம்யா நடித்த

**வாஞ்சிநாதன்**

10-30 (ப. நே)

அஜித், லைலா நடித்த

**தீனா**

2-30 (ப. நே)

[வெட்டுப்படாத முழுமையான காட்சி 2-45 மணித்தியாலப் படம்]



**நாகம்ஸ்**

(சுன்னாகம்)

**டைட்டானிக்**

(தமிழ் ரீலஸ்)

10-30, 2-30 (பு. நே)


## விக்ரம்-ராஜன்-கங்கு கிரிக்கெற் சுற்று போட்டி

கொக்குவில் வளர்மதி சனசமூக நிலயத்தினரால் நடாத்தப்படும விக்கிரம்-ராஜன் - கங்கு ஞாபகார்த்த கிறிக்கெற் சுற்றுப் போட்டி தொடரின்நேற்றைய ஆட்டத்தில், ஜொலிஸ்ரார் அணி வெற்றியீட்டியது.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்இப்போட்டியில் முதல் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்தியசனசமூக நிலைய அணி 133ஓட்டங்களைப்பெற்றது பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 137ஓட்டங்களைப் பெற்று நான்கு மேலதிக ஓட்டங்களால்வெற்றியீட்டியது. (ந-4)

---

**மட்டக்களப்பில்...**

மையால் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்திருந்த போதும் தனியார் பஸ்வண்டிகள் சில சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டிருந்தது. இராணுவத்தினர் வர்த்தக நிலையங்களைத் திறக்குமாறு உரிமையாளர்களைக் கேட்ட போதும் பெரும்பாலும் அவை பூட்டப்பட்டே இருந்தன.

நேற்று சனிக்கிழமையாக இருந்தமையால் பாடசாலைகளும், அரச திணைக்களங்களும் பூட்டப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு நகருக்கு வெளியே ஹர்த்தால் வெற்றி அளிக்காத போதும் மக்களின் இயல்பு வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்தது.

## பல்கலைக்கழக விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக2001—2002ம் கல்வியாண்டிற்கான அனுமதி விண்ணப்பம்படிவங்களை நாளை திங்கட் கிழமை முதல் பூபால சிங்கம் புத்தக சாலையில் பெற்றுக் கொள்ள முடியும் (இ)

---

**யாழ்-..**

மென்று கோரியேமட்டக்களப்பு சுதந்திர மாணவ முன்னணி ஹர்த்தலுக்கு அழைப்பு விடுத்திருந்தது. (வ-43)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.